பக்கங்கள் 16

விலை ரூ. 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 196

சனிக்கிழமை 10 ஜூன் 2023

வைகாசி 27 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## கோவில் நெரிசலில் சங்கிலிகள் 'அபேஸ்'

சாவகச்சேரி, ஜூன் 10
கோவில் குடமுழுக்கு நிகழ்வில் சனநெருக்கடியைப் பயன்படுத்தி மூன்று தங்கச்சங்கிலிகள் திருடப்பட்டுள்ளன.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி, சங்கத்தானை முருகமூர்த்தி ஆலயத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது. ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது. பெருமளவு பக்தர்கள் கோவில் மண்டபத்தில் நிறைந்திருந்தனர். இதன்போது சனநெரிசலைச் சாதகமாகப் பயன்படுத்தி இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. (அ-ம-9)

## வெள்ளி, ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புக்குத் தடை!

### ஜூலை 1 முதல் யாழ்ப்பாணத்தில் நடைமுறை

**யாழ்ப்பாணம், ஜூன் 10**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் தரம் ஒன்பதுக்குட்பட்ட மாணவர்களுக்கு வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்களை நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஜூலை மாதம் முதலாம் திகதிமுதல் இந்தத் தடை நடைமுறைக்கு வருகின்றது.**

»15

## வெங்காயம் நடுவதற்கு இயந்திரம் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10
வெங்காயச் செய்கையினை இலகுவாக்கும் வகையில், வெங்காயம் நடுகைசெய்யும் இயந்திரத்தை அச்சுவேலியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் உருவாக்கியுள்ளார்.
உழவு இயந்திரத்தின் (லான்ட் மாஸ்டர்) பகுதிகளைப் பயன்படுத்தி இந்த இயந்திரத்தை அவர் வடிவமைத்துள்ளார். இந்த இயந்திரத்தின் மூலம் வெங்காயம் நடுகை செய்யப்படும் பட்சத்தில் செலவுகள் பல மடங்காகக் குறைக்கப்படுகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார்.

»15

## விலைமாதுக்கள் 7 பேருக்கு வவுனியாவில் தொற்றுநோய்!

வவுனியா, ஜூன் 10
வவுனியாவில் கைதுசெய்யப்பட்ட விலைமாதுக்கள் 7 பேருக்கு தொற்றுநோய் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் தம்மை மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ளு

»15

ஸ்ரீலங்கா ரெலிகொம்

## தனியார் மயப்படுமாயின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

### நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 10
ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தை தனியார் மயப்படுத்துவது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என தேசிய பாது

»15

## நல்லிணக்கச் செயற்றிட்டம்; பணிகளைத் துரிதப்படுத்துக

### ஜனாதிபதி அறிவுறுத்து



கொழும்பு, ஜூன் 10
நல்லிணக்கத்துக்கான செயற்றிட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான சட்டங்கள் தயாரிப்பதை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.
நல்லிணக்கத்துக்கான செயற்றிட்டம் தொடர்பில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

»15

மல்லாவியில்

## சடலம் மீட்பு!

முல்லை., ஜூன் 10
முல்லைத்தீவு - மல்லாவி வடகாடு பகுதியில் நேற்று ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இராசையா கணேஸ்குமார் (வயது - 52) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.
அவர், யானை

»15

## நிபந்தனைகளை விதித்து பேச்சைக் குழப்பாதீர்கள்!

### தமிழ்க் கட்சிகளிடம் மஹிந்த கோரிக்கை



கொழும்பு, ஜூன் 10
ஜனாதிபதியுடனான பேச்சுக்களின் ஆரம்பத்திலேயே நிபந்தனைகளை முன்வைத்து, எச்சரிக்கைகளை விடுத்து அதைக் குழப்பியடிக்க வேண்டாம் என்று தமிழ்க் கட்சிகளிடம்

»15

## வடக்குக்கு காணி, பொலிஸ் அதிகாரம்: இதுவரை கலந்துரையாடப்படவில்லை

### நீதி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 10
வடமாகாணத்துக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்து அரசாங்கம் எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை எனவும் அது தொடர்பில் உள்ளக கலந்துரையாடல்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

»15

## தாம் நினைக்கும் தீர்வை தமிழரால் பெறமுடியாது!

### வீரசேகர எகத்தாளம்



கொழும்பு, ஜூன் 10
சம்பந்தன் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் ஜனாதிபதி ரணிலை மிரட்டி, தாம் நினைக்கும் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று பகல்கனவு காணக்கூடாது.
அதற்கு நாம் அனுமதியோம் என்று நாடாளுமன்ற உறுப்

»15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஜேந்திரகுமார் விவகாரத்தில்

# தென்னிலங்கை சிவில் அமைப்புக்கள் மௌனித்தமை ஏமாற்றமளிக்கிறது

### தமிழ்ச் சிவில் சமூக அமையம் தனது அறிக்கையில் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 10**

**நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அச்சுறுத்தப்பட்டமை சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டமை தொடர்பில் தெற்கில் குறிப்பாக கொழும்பின் சிவில் சமூகம் பெரும்பாலும் வாய் மூடி மௌனிகளாக இருப்பது ஆச்சரியத்தைத் தராவிட்டாலும் ஏமாற்றமளிப்பதாக தமிழ்ச் சிவில் சமூக அமையம் கருதுகின்றது என அமையத்தின் இணைப்பேச்சாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.**

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது

இன ரீதியான ஒதுக்கல், பழிவாங்குதல் நிகழ்வுகள், அழிப்புகள் எனப் பல்வேறு வகைகளில் கடந்த 75 வருடங்களாக இனவழிப்புக்குள்ளாகிவருகின்ற தமிழினத்துக்கு கஜேந்திரகுமார் மீதான விவகாரம் புதியதல்ல. எமது கண்டனங்கள் எவையும் இந்த நிலையை மாற்றப் போவதும் இல்லை. ஆனாலும் இந்தக் கைதுகளை தமிழ்ச் சிவில் சமூக அமையம் வன்மையாகக் கண்டிப்பதுடன் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஆதரவையும் தெரிவிக்க விரும்புகின்றது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமை தமிழ்ச் சிவில் சமூகத்தினருக்கும் ஏனைய தமிழ்ச் செயற்பாட்டாளர்களுக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவுமே பார்க்கவேண்டியுள்ளது.

இது தொடர்பில் தெற்கில் குறிப்பாக கொழும்பின் சிவில் சமூகம் பெரும்பாலும் வாய் மூடி மௌனிகளாக இருப்பது ஆச்சரியத்தைத் தராவிட்டாலும் ஏமாற்றமளிப்பதாக உள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினராயினும் தமிழராயின் அவருக்குத் தனது சொந்த மக்களைச் சந்திப்பதற்கு உரிமையுமற்ற நிலையே இந்தத்தீவில் நிலவுவதும் அதுவும் விளையாட்டு உபகரணங்களைத்தான் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுக்கு வழங்குவதற்கான ஒரு சாதாரண கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்துவதாயின் கூட ஒற்றர்களும் உளவாளிகளும் உருமறைப்பில் வருவர், பதிவுகளை மேற்கொள்வர் அதன் வழி கலந்துகொண்டவர்களை அச்சுறுத்துவர், பழிவாங்குவர் என்ற தீவிரநிலையில்தான் தமிழர்களின் தாயகம் உள்ளதாகவும் அப்பட்டமாக இந்த நிகழ்வுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசின் 75 வருட நீதியற்ற காட்டாட்சியின் கீழ் தமிழ் மக்கள் எவ்வாறான இடத்தில் வைக்கப்பட்டுள்ளார்கள், எதனால் அவர்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்குத் தள்ளப்பட்டார்கள், எதனால் அவர்கள் தமக்கான நீதியை தீவுக்கு வெளியில் தேடுகின்றார்கள், தமக்கு 75 ஆண்டுகளாக இழைக்கப்பட்டு வரும் அநீதிகள், கொடூரங்கள், படுகொலைகள் உள்ளடங்கிய இனவழிப்புக்கு எதிராக எதற்காக சர்வதேச விசாரணையைக் கோருகின்றார்கள் என்பவற்றுக்கான விளக்கமாக இந்த நிகழ்வுகள் அமைந்துள்ளன. சர்வதேச சமூகமும் தற்போதைய நிலைக்குக் கூட்டுப் பொறுப்பாளிகள் என்பதனை ஞாபகப்படுத்துகின்றோம். இலங்கை அரசு தொடர்பில் அவர்கள் கடைப்பிடிக்கும் மேம்போக்கு தமது சொந்த தேசிய, புவிசார் நலன்களின் பாற்பட்டது மட்டுமே என்பதனை நாம் அறிவோம். அதற்கு அப்பால் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், மானிடமாண்புகளைப் பேணல் என்பதெல்லாம் மேம்போக்கான பூசிமெழுகுதல்கள் மட்டுமே என்பதனையும் நாம் அறிவோம். எனவே, தமிழ் மக்கள் தொடர்பிலோ, அவர்களது மனித உரிமைகள் தொடர்பிலோ தமக்கு அக்கறை இருப்பதுபோல் தமிழ் மக்களுக்கு போலி நம்பிக்கைகளை மட்டும் தருவதை தொடராது இனியாவது உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என நாம் சர்வதேச சமூகத்தை வினயத்துடன் வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (ஒ-இ)

## இரும்பு விலை சரிவு!

இரும்பின் விலை சுமார் 50 வீதத்தால் குறைவடைந்துள்ளது என இரும்பு இறக்குமதியாளர் சங்கம் அறிவித்துள்ளது.

ரூபாவின் பெறுமதி வலுவடைவதால் இரும்பின் விலை குறைவடைந்துள்ளது என இரும்பு இறக்குமதியாளர் சங்கத்தின் உறுப்பினர் குறிப்பிட்டார். (ச-இ)

## தமிழ் மக்கள் சட்டம், ஒழுங்கு மீது எப்படி நம்பிக்கை வைப்பார்கள்?

### அரசிடம் கேள்வி எழுப்புகிறது ஜே.வி.பி.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்ட விதம் முற்றிலும் தவறானது. இதன்மூலம் அரசு தமிழ் மக்களுக்கு வழங்கும் செய்தி என்ன? தேசிய நல்லிணக்கம் தொடர்பில் பேசிக்கொண்டு முறையற்ற வகையில் செயற்படும்போது தமிழ் மக்கள் சட்டம், ஒழுங்கு மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிதி. பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் அவர் கைது செய்யப்பட்ட விதம் முற்றிலும் தவறானது. இதன்மூலம் அரசு தமிழ் மக்களுக்கு வழங்கும் செய்தி என்ன? இன நல்லிணக்கம் தொடர்பில் ஒரு புறம் கதைத்து விட்டு பிறிதொரு புறம் தமிழ் பிரதிநிதிக்கு எதிராகச் செயற்படும்போது தமிழ் மக்கள் எவ்வாறு சட்டம், ஒழுங்கு மீது நம்பிக்கை கொள்வார்கள்? இது பாரதூரமான பிரச்சினை. குற்றமிழைப்பவர்களை சமமாக நடத்த வேண்டும். நாடாளுமன்றத்தில் இந்த வித்தியாசத்தை அவதானித்தோம். ஆளும் தரப்புக்கு ஒரு சலுகை எதிர்க்கட்சிக்கு பிறிதொரு சலுகை என்று அரசாங்கம் மனம்போன போக்கில் செயற்படுகிறது - என்றார். (ஒ-22)

# கஜேந்திரகுமாரைக் கைது செய்த அரசு டயனாவை ஏன் கைது செய்யவில்லை?

### ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, ஜூன் 10

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைக் கைது செய்ய அரசும் பொலிஸும் காட்டிய அவசரத்தை முறைகேடான முறையில் கடவுச்சீட்டு பெற்றுக் கொண்டுள்ள விவகாரத்தில் கைது செய்யமுடியும் என்று கோட்டை நீதிவான் நீதிமன்றம் அறிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே விடயத்தில் ஏன் காண்பிக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே -இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாட்டில் சட்டம் அனைவருக்கும் பொதுவாகச் செயற்படுத்தப்படுகிறதா? என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

டயனா கமகேவின் இரட்டைக் குடியுரிமை விவகார வழக்கின் தீர்ப்பு தொடர்ந்து பிற்போடப்படுகிறது. முறைகேடான முறையில் கடவுச்சீட்டுப் பெற்றுக் கொண்டுள்ள விவகாரத்தில் டயனா கமகேவை கைது செய்ய முடியும் என கோட்டை நீதிவான் நீதிமன்றம் அறிவித்துள்ள நிலையில் அவரை இதுவரை கைது செய்யாததற்கான காரணம் என்ன?

நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே 2004ஆம் ஆண்டு முதல் பிரிட்டன் நாட்டு கடவுச்சீட்டை பாவிக்கிறார் என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர் பாதுகாப்புச் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்துக்கு பொருத்தமற்ற இவரை எவ்வாறு நாடாளுமன்றம் பாதுகாக்க முடியும்? நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க மீது சட்டத்தைச் செயற்படுத்த முடியுமாயின் ஏன் டயனா கமகே விவகாரத்தில் சட்டத்தைச் செயற்படுத்த முடியாது? இலங்கை பிரஜை இல்லாத, பிரிட்டன் பிரஜையை நாடாளுமன்றம் பாதுகாப்பதை மக்கள் கடுமையாக விமர்சிப்பார்கள் - என்றார். (ஒ-22)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு.

* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்.

தொடர்பு: 076 739 0413
076 4365 814


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர் அதிபர் தேர்தல் களமிறங்கும் ஈழத்தமிழன்



யாழ்ப்பாணம், ஜூன் 10

**சிங்கப்பூரில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர் களமிறங்கவுள்ளார்.**

யாழ்ப்பாணம் ஊரெழு மற்றும் உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த - தற்போது சிங்கப்பூரின் மூத்த அமைச்சராகவுள்ள தர்மன் சண்முகரத்தினம் என்பவரே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

அதற்கென தற்போது ஆற்றி வரும் தனது அமைச்சர் பதவி மற்றும் சிங்கப்பூர் நாணய ஆணையத்தின் ஜீ.ஐ.சி. இன் துணைத் தலைவர், பொருளாதார மேம்பாட்டு வாரியத்தின் சர்வதேச ஆலோசனைக் குழுவின் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளிலிருந்து அவர் விலகவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-27)

## 'சீல்' வைக்கப்பட்ட உணவகத்தை தண்டத்துடன் திறக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 10

கன்னாதிட்டியில் சீர்கேடாக இயங்கிய உணவகத்துக்குச் சீல் வைக்கப்பட்டிருந்த நிலையில் அதனைத் தண்டத்துடன் மீளத் திறப்பதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

மே மாதம் 10 ஆம் திகதி யாழ். மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையிலான குழுவின் வழமையான பரிசோதனையில் கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள உணவகம் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து உணவக உரிமையாளருக்கு எதிராக மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் கடையை சீல் வைத்து மூடுமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு உத்தரவிட்டார். கடை சீல் வைத்து மூடப்பட்டது.

வழக்கு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது உணவக உரிமையாளருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் உணவக திருத்த வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதையடுத்து கடையை மீளத் திறப்பதற்கான அனுமதியையும் நீதிமன்றம் வழங்கியது. (ஒ-26)



## 17 பரல்களில் கோடா: வைத்திருந்தவர் கைது!

கிளிநொச்சி, ஜூன் 10

கிளிநொச்சி இராமநாதபுர சுடலைக் குளப பகுதியில் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் ஒருவர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இராமநாதபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து கசிப்புக் காய்ச்சுவதற்காகத் [illegible] வைக்கப்பட்டிருந்த பரல்களில் 3 ஆயிரத்து 708 லீற்றர் கோடா மீட்கப்பட்டது.

சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இராமநாதபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-ரி-113)

## தென்மராட்சி 20 பிரிவுகளில் வீட்டுத்திட்டத் தெரிவு இல்லை

### மக்கள் முறையீடு

மீள்குடியேற்ற அமைச்சால் முன்னெடுக்கப்படும் இந்த வருட வீட்டுத்திட்டத்தில் தென்மராட்சியில் 20 கிராமஅலுவலர் பிரிவுகளில் தெரிவுகள் இடம்பெறவில்லை என அந்தப் பகுதி மக்கள் முறையிட்டுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பத்து லட்சம் ரூபா பெறுமதியான வீடமைப்புத் திட்டத்துக்கு 42 பயனாளிகளும் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான வீடமைப்புத் திட்டத்துக்கு 20 பயனாளிகளும் தெரிவுசெய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் மக்கள் பார்வைக்காகப் பிரதேச செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டன.

பயனாளர்கள் தெரிவில் ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்து மூலம் தெரியப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தநிலையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் 20 கிராமஅலுவலர் பிரிவுகளிலுள்ள நிரந்தர வீடகளற்ற பலருக்கு வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெறவில்லை. அதனால் மேலும் 20 வீடுகளுக்கு பரிந்துரை செய்யுங்கள் என பிரதேச செயலகத்தில் அந்தப் பிரிவு மக்கள் முறையிட்டுள்ளனர். (ச-9)

## நீதியரசர் நியமனத்தில் வெளிப்படை இல்லை!

### சாலிய பீரிஸ் கண்டனம்

கொழும்பு, ஜூன் 10

உயர்நீதிமன்ற நீதியரசர் நியமனங்களில் வெளிப்படைத் தன்மை பேணப்படவில்லை என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட உயர்நீதிமன்ற நீதியரசர் நியமனங்களில் சில தவறான நியமனங்களும் இடம்பெற்றுள்ளன. இந்த விடயத்தில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் நடந்து கொண்டாலேயே மக்களுக்கு நீதித்துறையின் மீது நம்பிக்கை ஏற்படும் - என்றார்.

நீதித்துறைச்சேவைச் சங்கம் கடந்த புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், திகிரி ஜெயதிலக நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டமை தவறு எனச் சுட்டிக்காட்டியிருந்தது. அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த கனிஷ்டதர உத்தியோகத்தர் ஒருவர் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் நீதித்துறைச் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-6)





வீட்டுக்கட்சி என்னதான் வெளியில தங்களுக்குள்ள ஒரு பிரச்சினையுமில்லை எண்டமாதிரிக் காட்டிக் கொண்டாலும், உள்ளுக்க கடும் குத்துப்பாடுதானாம். இவ்வளவு நாளும் வடக்கிலைதான் நாலைஞ்சு கன்னையாப் பிரிஞ்சு ஆளையாள் முதுகில குத்தினவை. இப்ப கிழக்கிலையும் அப்பிடிக் கட்சிக்குள்ள குழிபறிக்கிற வேலையள் அறம்புறமா நடக்குதாம்.

திருகோணமலையில சம்பந்தமானவர் தான் எல்லாத்துக்கும் பொறுப்பு. ஆனால் அவருக்கு இப்ப உடம்பு அவ்வளவு ஏலாது எண்டதால, இராமனுக்கு 'குகன்' தம்பியா இருந்தமாதிரி தனக்கும் 'தாசனா' இருக்கக்கூடிய ஆளை நம்பி அவரிட்ட பொறுப்புகளைக் குடுத்திருந்தவர். சம்பந்தமானவர் போகவேண்டிய கூட்டங்கள், எடுக்க வேண்டிய முடிவுகள் எண்டு மாவட்ட மட்டத்தில அவர்தான் பார்த்தவர். கிட்டத்தட்ட சம்பந்தமானவர் எண்ட உடையாரின்ர கைத்தடியா அந்தத் தாசன் தான் இருந்தவர்.

கட்சி சார்பில வடக்கு வீதியில சட்டம்பியார் தனிச்சமா வைக்கிற மாதிரி, கிழக்கு வீதியில தானும் தனிச்சமா வைக்கிற ஆளா இருக்கவேணுமெண்டு 'தாசனா' இருந்தவர் நினைச்சு, சம்பந்தமானவருக்குச் சொல்லாமல் கொள்ளாமல் சில வேலையள் செய்திருக்கிறார். இதை தாசனாருக்கு பிடிக்காதவை சம்பந்தமானவரின்ர காதில போட்டுவிட, தாசனாரின்ர பொறுப்பெல்லாம் உடனேயே பிடுங்குப்பட்டிட்டாம். இப்ப தாசனார் இருந்த இடத்துக்கு புதிசா ஒராளைப் போட்டதோட, 'எனக்குப் பதிலா இந்தக் கைத்தடிதான் இனி எல்லா இடமும் வருவார்' எண்டு தன்ர கைப்பட சம்பந்தமானவர் கடிதமும் அடிச்சுக் குடுத்திட்டாராம்.

தாசனா இருந்தவர் ஆப்பு வைச்ச மாதிரி, வடக்கு வீதியில தனிச்சமா வைக்கிற சட்டம்பியாரோ இல்லாட்டி எல்லாத்துக்கும் சீறுற மீசைக்கார எம்.பி.யோ தமிழரசுக் கட்சியைக் கொத்திக் கொண்டு போயிடுவினமோ எண்டும் சம்பந்தமானவருக்கு கலக்கமாம். அதால, இன்னும் கொஞ்சக்காலத்துக்கு தான் சொல்லுற எல்லாத்துக்கும் தலையாட்டுற தன்ர சேனாதிபதியையே, கட்சிக்குத் தலைவரா நீடிக்கிறதுக்கு மற்றவையின்ர சம்மதத்தை கேக்கிற பிளானில இருக்கிறாராம். 'தமிழரசுக் கட்சியின்ர தலைமைப் பதவியை நான் விட்டதுதான் பெரும் பிழை' எண்டும் இந்த ஏலாத நேரத்திலையும் சம்பந்தமானவர் தனக்கு நெருங்கினவையிட்ட சொல்லிப் புலம்பிறாராம்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூசகர்களிடையே பூசல்

# நல்லூர் வீரமாகாளி அம்பாள் ஆலய உற்சவம் தடைப்பட்டது

### நேற்று மாலையே கொடியேற்றம்

**யாழ்ப்பாணம், ஜூன் 10**

**நல்லூர் வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்த நிலையில், பூசகர்களி டையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஆலயக் கதவு மூடப்பட்டு மஹோற்சவம் தடைப்பட்டது. எனினும் நீதிமன்ற உத்தரவுக்கமைய நேற்றுமாலை கொடியேற்றம் இடம்பெற்றது.**

குறித்த ஆலயத்தின் 3 குடும்பங்களைச் சேர்ந்த பூசகர்களிடையே மஹோற்சவத்தை யார் முன்நின்று நடத்துவதென நீண்டகால முரண்பாடு நீடித்து வந்ததையடுத்து இந்த விவகாரம் தொடர்பில் யாழ்.மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

கடந்த 6 ஆம் திகதி யாழ்ப்பாண நீதிமன்று சிவதர்சக் குருக்கள் என்பவரை இந்த வருடத்துக்கான மஹோற்சவத்தை முன்னின்று நடத்துமாறும் ஏனைய இரு பூசகர்களும் இடையூறு செய்யக்கூடாது எனவும் கட்டளையிட்டது.

ஆயினும் ஆலயத் திறப்பை உரிய பூசகரிடம் கையளிக்காததால் மீளவும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் யாழ்ப்பாணப் பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினர் அங்கு பிரசன்னமாகி முரண்பாட்டைத் தடுத்து ஆலயத்தை பூட்டிவிட்டு "நீதிமன்றில் திறப்பு ஒப்படைக்கப்படும். உரிய ஆதாரங்களை வழங்கி பெற்றுக் கொள்ளவும்" என்று கூறி எடுத்துச் சென்றனர்.

நீதிமன்றில் வழக்கு நேற்றைய தினம் மீளவும் எடுக்கப்படவிருந்ததால் முற்பகல் 10 மணியளவில் இடம்பெறவிருந்த ஆலய மஹோற்சவத்தின் கொடியேற்றம் இடம்பெறவில்லை.

ஆலயக் கதவுகள் மூடப்பட்டதால் வழிபடுவதற்காக வந்த மக்கள் காலைமுதல் ஆலயத்துக்கு வெளியே காத்திருக்கும் அவலம் ஏற்பட்டிருந்தது.

பின்னர் வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது சிவதர்சக் குருக்கள் தலைமையில் திருவிழாவை நடத்துமாறும் தடுப்



போரைக் கைது செய்யுமாறும் பொலிஸாருக்கு நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதையடுத்து நேற்றுமாலை கொடியேற்றம் இடம்பெற்றது.

இதேவேளை யாழ்ப்பாண இந்து ஆலயங்களில் அண்மைக்காலங்களாக உள்ளக முரண்பாடுகள் அதிகரித்துவருவது தொடர்பில் யாழ்.மாவட்டச் செயலர் வெளிப்படையாக கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-26,20,17)

## கண்புரை சிகிச்சைக்குத் தெரிவு தென்மராட்சியில் இறுதிமுகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

தென்மராட்சிப் பகுதிகளில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடையோரை தெரிவு செய்வதற்கான இறுதிக் கண்பரிசோதனை முகாம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.

இதுவரை பதிவுசெய்யத் தவறிய கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் இந்த முகாமில் பங்கேற்று பதிவுகளை மேற்கொள்ளவும் என யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச-ரி)

## இரு நூல்கள் வெளியீடு அறிமுகமும் உரையாடலும்

யாழ்ப்பாணம், ஜூன் 10

ஊடறு அமைப்பின் ஏற்பாட்டில் 'கோ.ந.மீனாட்சியம்மாள் படைப்புக்கள்', 'சங்கமி' ஆகிய இரு நூல்களின் அறிமுகமும் உரையாடலும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அருகில் தந்தை செல்வா கலையரங்கில் கலாநிதி சு.குணேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளரும் எழுத்தாளருமான எம்.எம்.ஜெயசீலன், 'மலையகம் 200 கடந்த காலமும் நிகழ்காலமும்' எனும் விடயப்பொருளில் உரையாற்றவுள்ளார்.

தொடர்ந்து உதயகுமார் ஜெயலட்சுமி, ச.சத்திய தேவன், சி.பரமேஸ் ஷப்னா இக்பால் உள்ளிட்ட எழுத்தாளர்களும் நூலுக்கு அறிமுகவுரைகளை நிகழ்த்தவுள்ளனர். (ச-ரி-66)

## கூட்டுறவு தினப் போட்டிகள் வெற்றியீட்டிய மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

10ஆவது கூட்டுறவு தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட கூட்டுறவு சமாசத்தால் பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள் நடத்தப்பட்டன.

பேச்சுப்போட்டியில் தரம் 6,7,8 மாணவர்களிடையே யாழ். இந்துக் கல்லூரி மாணவன் நிஷாந்தன் திருவரேஸ்வர், தரம் 9,10, 11 மாணவர்களிடையே யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் இந்திரஜித் கார்த்திகன் மற்றும் தரம் 12,13 மாணவர்களிடையே யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி சத்யா வானேந்திரன் ஆகியோர் முதலிடத்தைப் பெற்றனர்.

கட்டுரைப் போட்டியில் தரம் 6,7,8 மாணவர்களிடையே யாழ். விக்ரோரியாக் கல்லூரி மாணவி லக்ஸ்மிகா திஷாகரன், தரம் 9,10, 11 மாணவர்களிடையே மகாஜனக் கல்லூரி மாணவி கனிமொழி கணேசானந்தன், தரம் 12,13 மாணவர்களிடையே யாழ்.வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவி சக்திகா வேவிராசா ஆகியோர் முதலிடத்தை பெற்றனர்.

சித்திரப் போட்டியில் தரம் 6,7,8 மாணவர்களிடையே சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் அனோட் ஜெயராஜ் அடிஸ்ரன், தரம் 9,10, 11 மாணவர்களிடையே கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி விஷாந்தனா மதியழகன், தரம் 12,13 மாணவர்களிடையே சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி அ.ஜெ.சவ்ளின் நித்திலா ஆகியோர் முதலிடத்தைப் பெற்றனர் - என யாழ்.மாவட்ட கூட்டுறவு சமாசச் செயலாளர் அறிவித்துள்ளார். (ச-17,159)

## 'கருவி' நிறுவன தசவிழா நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 10

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் .வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன் கலந்துகொள்ளவுள்ளார்.

அத்துடன் 'பயணத்தின் நாட்கள்' எனும் கருவி நிறுவனத்தின் 10 ஆம் ஆண்டு ஆவணத் தொகுப்பு நூலும் வெளியிடப்படவுள்ளது. (ச-ரி)

# இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.



**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக் கூடும் . பேசும் போது கவனம் தேவை.



**மிதுனம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படும், உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.



**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால்சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மகிழ்ச்சி உண்டாகும்.



**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சி சாதகமாக முடியும். முடிவு ஒன்று எடுப்பீர்கள்.



**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். ஆதாயம் உண்டாகும். செலவு செய்ய நேரிடும். கணவன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.



**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர் பான முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படும்.



**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும்.



**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும், கருத்தொற்றுமை ஏற்படும்.



**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். செயல்களில் கவனமாக இருக்கவும்.



**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பிடிவாதப் போக்கு மாறி, செயற்படுவீர்கள்.



**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக் கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வெறும் கைகளால் முழம் போடல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்று முடிந்திருக்கின்றது. 'வழமைபோன்று இனியும் ஏமாற முடியாது. தீர்க்கமான முடிவெடுப்போம்' என்று இந்தச் சந்திப்பின் போது சம்பந்தர் முழங்கியுள்ளார். அவரது இந்த முழக்கம் ஒன்றும் தமிழ் மக்களுக்கோ சிங்கள ஆட்சியாளர்களுக்கோ புதிதல்ல. 'குறுகிய காலத்துக்குள் தீர்வு வழங்காவிட்டால் காத்திரமான முடிவெடுப்போம்' என்று ரணிலுக்கு சம்பந்தன் கூறியபோதும் அவர் தரப்பிலிருந்து உருப்படியான பதில் எதுவும் வழங்கப்படவில்லை. சம்பந்தன் இந்தச் சந்திப்பில் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டிருக்கின்றார்.

'தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை பலமுறை ஜனாதிபதியிடம் தெரிவித்தாயிற்று, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு, உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் நிரந்தரத் தீர்வை மிகக்குறுகிய காலத்துக்குள் அடுத்த சில மாதங்களுக்குள் முன்வைக்க வேண்டும். அரசு அதைச் செயற்படுத்தத் தவறினால், தமிழ் மக்களுக்குள்ள வெளியகச் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், அதற்கான நடவடிக்கைகளில் இறங்குவோம்' என்பதே அந்த விடயம்.

நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற 2015 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இன்றைய ஜனாதிபதியும் அன்றைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுடன், இரா.சம்பந்தன் தலைமையிலான அப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சுமுகமான உறவிலேயே இருந்தார்கள். ரணில் விக்கிரமசிங்கவின் பதவியைப் பாதுகாப்பதே தமது தலையாய கடமை என்று எண்ணிச் செயற்பட்டுமிருந்தார்கள். ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து புதிய அரசமைப்பை உருவாக்கமுடியும் என்று நம்பி பல காரியங்களைக் கூட்டமைப்பினர் ஆற்றியிருந்தார்கள். அதே நல்லாட்சிக் காலத்தில், அதாவது 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி வலி. மேற்கு பிரதேச சபை முன்றிலில் அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் திருவுருவச்சிலை திறப்பு விழா நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட இரா.சம்பந்தன், 'சர்வதேசச் சட்டத்தின் பிரகாரம், எமது உரித்து, எமது உரிமை, சிவில் அரசியல் உரிமைகள் சம்பந்தமான சர்வதேச ஒப்பந்தம் மற்றும் பொருளாதார சமூக கலாசார விடயங்கள் சம்பந்தமான சர்வதேச ஒப்பந்தங்களின் அடிப்படையில், ஒரு மக்கள் குழாமுக்கு உள்ளக சுயநிர்ணயத்துக்கு உரித்துண்டு. அதை எவரும் மறுக்கமுடியாது. அவ்விதமான உள்ளக சுயநிர்ணய உரிமை அந்த மக்களுக்கு வழங்கப்படாவிட்டால், அவர்களுக்கு வெளியக சுயநிர்ணய உரிமைக்கும் உரித்துண்டு' என்று உரையாற்றியிருந்தார். கிட்டத்தட்ட 5 ஆண்டுகளின் பின்னரும் அதே அரைத்த மாவையே ரணிலின் முன்னால் நேற்றுமுன்தினமும் அரைத்திருக்கிறார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கல் முயற்சி தோல்வியில் முடிவடைந்தபோது, ராஜபக்சக்கள் அதைத் தோற்கடித்துவிட்டார்கள் என்றுதான் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு சாடியதே தவிர, அவர்கள் கூறியதைப்போன்று உள்ளக சுயநிர்ணய உரித்து மறுக்கப்பட்டால் வெளியக சுயநிர்ணயத்தைக் கோருவோம், சர்வதேசத்திடம் அதைக்கேட்போம் என்பதைச் செய்யவில்லை.

இப்போதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இவ்வளவு ஆக்ரோசமாகப் பேசிய இரா.சம்பந்தன், அவர் கேட்டுக்கொண்டதைப்போல் குறுகிய காலத்தினுள் ரணில் எதையும் செய்யவில்லை என்றால் தீர்க்கமான முடிவெடுப்போம் என்று கூறியிருக்கின்றார். அந்தத் தீர்க்கமான முடிவு என்ன என்பதை அவர் ரணிலுக்கும் சொல்லவில்லை, தமிழ் மக்களுக்கும் சொல்லவில்லை. அதைவிட இவர்கள் எடுக்கும் முடிவு தீர்க்கமானதா? என்பதும் அது எவ்வளவு தூரம் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் ஒன்றாக இருக்கமுடியும் என்பதும் கேள்வியே. தமிழர் தரப்பு பலமான நிலையில் இன்று இல்லை. தினமும் பல வீனப்பட்டுக்கொண்டேயிருக்கின்றது. பல துண்டுகளாக உடைந்து துகள்களாகிக் கொண்டிருக்கின்றது. இந்தச் சீத்துவத்தில், சம்பந்தன் கூறுவதைப்போல் தீர்க்கமான முடிவை எடுக்க முடியுமா? வெளியக சுயநிர்ணயத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளில் இறங்குவதற்கான வழிவரைபடம் என்ன? எதுவுமே சொல்லாமல் வெறும் கையால் முழம் போடுவதால் நடக்கப்போவது ஒன்றுமில்லை.

### நாளொரு நல்வார்த்தை

"எதிரி இல்லையென்றால் சண்டை இல்லை; சண்டை இல்லையென்றால் வெற்றி இல்லை; வெற்றி இல்லையென்றால் மகுடம் இல்லை"
– தோமஸ் கார்லைல்



# கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்; இலங்கை பாதுகாக்கவேண்டும்

### அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 10**

**கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை இலங்கை பாதுகாக்க வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார்.**

ஒவ்வொரு பிரஜைக்கும் கருத்துச் சுதந்திரத்துக்குள்ள உரிமையே ஜனநாயகத்துக்கான முக்கியமான அம்சம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையை மீளக்கட்டியெழுப்பும், உறுதிப்பாடானதாக்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் வளமானதாக்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு இந்த அடிப்படை உரிமை பாதுகாக்கப்படுதல் மிகவும் அவசியம் எனவும் ஜூலி சங் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

# பௌத்த வழிபாட்டுக்கு இடையூறு: குருந்தூர் வழக்கு ஒத்திவைப்பு!

### கஜேந்திரன், வினோ எம்.பி.கள் முன்னிலையாகவும் பணிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 10

குருந்தூர்மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு இடமான முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில், கடந்த வருடம் மே மாதம் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்களை வரவழைத்து இராணுவத்தினர் இணைந்து நீதிமன்றக் கட்டளையையும் மீறி, புத்தர் சிலை நிறுவுவதற்கும் பூசை வழிபாடுகளை மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

நீதிமன்றக் கட்டளைகளை மீறி மேற்கொண்ட இந்த முயற்சிக்கு எதிர்ப்புத்தெரிவித்து குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர். எதிர்ப்புகளையடுத்து குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்படவிருந்த பௌத்த வழிபாடுகள் கைவிடப்பட்டன.

அதனையடுத்து வழிபாடுகளைத் தடுக்கமுற்பட்டதாகத் தெரிவித்து வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவி கரன், கந்தையா சிவநேசன் ஆகியோருக்கு எதிராக 7 தேரர்களால் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், வழக்குடன் தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும் வினோ நோகராதலிங்கம் ஆகியோர் அடுத்த தவணையில் முன்னிலையாகவேண்டும் எனவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு வழக்கு தவணையிடப்படுகிறது எனவும் நீதிமன்றம் கட்டளையிட்டது. (ச-246)

நாளை 11.06.2023 ஞாயிற்றுக்கிழமை வைகாசி 28

சுபநேரம் : 08.52 – 10.22
ராகுகாலம் : 04.22 – 05.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. சிவசாமி கி

# 60 ஆவது அகவை ந



## கல்விசார் பெருந்தகையீர்!

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.குருமுதல்வர்,
திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.

இன்று ஆசிரியராக, அதிபராக, ஆலோசகராக பணியாற்றும் வேலணை மத்திய கல்லூரியில் பணியாற்றி ஓய்வுபெறும் அதிபர் சிவசாமி கிருபாகரன் அவர்களின் பணியினை பாராட்டி இன்று மணிவிழா காண்பது அனைவருக்கும் மகிழ்ச்சியினை தருகின்றது. வேலணை மத்திய கல்லூரியில் பல வரலாற்று சாதனைகளை தீவக மக்களிற்கு மட்டுமின்றி ஏனயை மக்களிற்கும் வழங்கியன யாவரும் அறிவர். நீண்ட வரலாற்றைகொண்ட மத்திய கல்லூரி இன்றும் பல சாதனைகளை புரிந்து கொண்டுள்ளது. அந்த வகையில் கடமையாற்றிய அதிபர்கள் ஆலோசர்கள் அனைவரும் பாரட்டுக்குரியவர்கள் அந்த வகையில் இன்று பணியாற்றிய சிவசாமி கிருபாகரன் காலத்திற்கேற்ற வரலாற்றை உருவாக்குவதிலும் பல சிறப்புகளை கண்டுள்ளார். அதிபராக பணியாற்றி கிருகாகரன் ஐயா தனக்கென ஓர் இடத்தை இவ் தீவக மண்ணில் நிலை நாட்டியமை அனைவருக்கும் மகிழ்ச்சியினை தருகின்றது. அந்தவகையில் இன்று மணிவிழா எடுக்கும் நல்லுள்ளங்களையம் பாராட்டிகின்றோம் மேலும் பல பணிகளை புரிந்து சமுகத்திற்கும். அனைவருக்கும் நல் சேவைகளை இவர் மென்மேலும் வழங்க இறைவனை வேண்டுகின்றோம்.
என்றும் வேண்டும் இன்ப அன்பு.



## திரு . சிவசாமிகிருபாகரன் அதிபர் வேலணை மத்திய கல்லூரி அவர்களின் மணிவிழா வாழ்த்துச் செய்தி

இ.இளங்கோவன்
மேலதிக செயலாளர்
ஜனாதிபதி செயலகம்


ஒரு கணித பாட ஆசிரியராக தனது பணியினை தொடங்கி இன்று தரம் 1 ஐச் சேர்ந்த அதிபராக உயரந்து தனது சேவைக்காலத்தினை நிறைவுசெய்து மணிவிழாக் காணும் திரு சி.கிருபாகரன் அவர்களுக்கு வாழத்துச் செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். யுத்த காலங்களில் இடம்பெயர்ந்த காலங்களில் ஒரு கணித பாட ஆசிரியராக பல இன்னல்களுக்கு மத்தியில் தன்னுடைய சிறப்பான சேவையினை மாணவர்களுக்கு வழங்கியிருந்தார் அத்துடன் பங்களிப்பினை சிறந்த வழங்கியதுடன் வழமையான வறிய மாணவர்களின் வகுப்புக்களுக்கு மேலதிக விசேட வகுப்புக்களை நடாத்தி மாணவர்களின் கணித அறிவினை மேம்படுத்த அரும்பாடு பட்டதுடன் அதிக மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்கு உறுதுணையாக இருந்தார்
தீவக மண்ணின் மைந்தனாக யா/ வேலணை மத்திய கல்லூரியினை பொறுப்பேற்று மாணவர்களின் பாடவிதான மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் அதிக அக்கறையுடன் முன்னேற்றியதுடன் பணியாற்ற வட மாகாணத்தின் முதல் தர பாடசாலைகளில் ஒன்றாக அதனை தொடர்ந்தும் முன்னேற்றுவதில் பணியாற்றி வருகின்றார் பாடசாலையில் முகாமைத்துவ நெருக்கடி ஏற்பட்ட போது அதனால் துவண்டு போகாமல் அதனை சிறப்பாக எதிர்கொண்டு கொள்ளவேண்டிய விடயமாகும் பெருமை வழிநடத்தியமை வெற்றிகரமான பாடசாலையாக தன்னுடைய சமூக பணிகளின் ஊடாக வசதி வாய்ப்பற்ற வறிய மாணவர்களுக்கு வழங்கிய காலத்திலும் வழங்க வேண்டும் என்று சேவையினை தொடர்ந்தும் அவருடைய கேட்டுக்கொள்வதோடு திரு சிகிருபாகரன் அவர்களின் ஓய்வுக்கீலம் சிறக்க வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



## ஆற்றல் மிக்க ஆசான் ஆளுமை மிக்க அதிபர்

சிவலிங்கம் சத்தியசீலன்
மேலதிக பணிப்பாளர் நாயகம்
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - செத்சிறிபாய, பத்திரமுல்ல

தீவக மண்ணில் பிறந்து தனது அர்ப்பணிப்பான சேவையினாலும் மாணவர் நலன்சார்ந்து மேற்கொண்ட வேலைத்திட்டங்களினாலும் மாட்சிமை பெற்றிருப்பவர் திரு. சிவசாமி கிருபாகரன் அவர்களால் நான் மாணவனாக இருந்த காலத்தில் உருவான அறிமுகம் வேலணை மத்திய கல்லூரின் அதிபராக அவர் கடமையாற்றிய காலத்தில் உத்தியோக பூர்வமாக தொடர்வதற்கு காரணமாக அமைந்திருந்தது. மாணவர்களிடம் மிகுந்த பற்றும், அக்கறையும், தனது பாடசாலை தான் பிறந்த மண், தனது கிராமம் என்ற உணர்வும் அக்கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் தனது பெயரையும் பொறிப்பதற்கு காரணமாக அமைந்திருந்தது.
எமது சமூக உருவாக்கத்திலும் மக்களின் கல்வி, பொருளாதார உயர்வுகளிலும் எமது அதிபர்கள், ஆசிரியர்கள் ஆற்றியுள்ள மகத்தான பணி காலத்தால் அழியாதது தீவக மண்ணில் பல்லாயிரக்கணக்கான புத்திஜீவிகளையும் கல்விமான்களையும் உருவாக்கிய இக் கல்லூரியின் தடங்களில் திரு. கிருபாகரனின் பங்களிப்பும் முக்கிய மனானதாக அமைந்துள்ளதுநான் பிறந்த பிரதேசத்தின் புகழ்பெற்ற கல்லூரி என்ற வகையிலும் எனது தந்தை கல்வி கற்று உயர்வடைந்த கலைக் கூடம் என்ற வகையிலும் இக் கல்லூரியின் வளர்ச்சியிலும் பெருமையிலும் என்றும் எனது பங்களிப்பும் அக்கறையும் இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. மணிவிழா காணும் அதிபர் திரு.கிருபாகரன் எல்லாச் சிறப்புக்களையும் மேன்மைகளையும் பெற்று தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நீடுழி வாழ எல்லாம் வல்ல பரம்பொருளின் அருள் கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திப்பதுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



## அரச அதிபரின் வாழ்த்துச்செய்தி

திரு. அ. சிவபாலசுந்தரன்
அரசாங்க அதிபர் மாவட்டச்செயலாளர் யாழ்ப்பாணம்.

வேலணை மத்திய கல்லூரியில் 2011ம் ஆண்டிலிருந்து அதிபராகக் கடமையாற்றி இன்றுடன் ஓய்வு பெறுகின்ற நண்பன் திரு சிவசாமி கிருபாகரன் மணிவிழாக்காணும் நன்னாளில் அவரின் ஓய்வுகாலம் மகிழ்ச்சிகரமானதாகவும் ஆரோக்கியமானதாகவும் அமைய வேண்டுமென வேலணை மத்திய கல்லூரியில் வீற்றிருந்து அருள்புரியும் ஆடல்வல்லானாம் சிதம்பரேஸ்வரனின் திருப்பாதம் பணிந்து வேண்டுகிறேன்.
கிருபா! அசாதாரணமானவன். காய்க்கும் மரங்கள் கல்லெறிகளுக்குப் பயந்து மீண்டும் பூக்காமல் விடுவதில்லை. அவ்வாறே கல்லூரியின் பல்பரிமாண வளர்ச்சிக்கான முயற்சிகளின்போது எத்துணை தடைகள் வரினும் அவற்றை எல்லாம் தாண்டி "எண்ணித்துணிக கருமம்" என்னும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க துணிந்து பணியாற்றி வெற்றி காண்பவன். சந்திக்கிறபோதெல்லாம் கல்லூரியின் வளர்ச்சி பற்றியும் அதற்கான முயற்சிகள் பற்றியும் சிந்தித்துக்கொண்டிருப்பவன். வருடாந்த இல்லமெய்வல்லுனர் திறனாய்வு விழாவில் என்னை அழைத்து எனக்குப்பெருங்கௌரவத்தை வழங்கி என்னையும் கல்லூரியையும் பெருமைப்படுத்தியவன். அன்றைய நிகழ்வில் தன்னுரையில்கூட கல்லூரியின் எதிர்கால வடிவம்பற்றிய தன் பெருங்கனவை வெளியிட்டவன். பல்துறை ஆற்றலாளனாய், மாணவர்மத்தியில் ஓர் நட்பு பாராட்டும் மதிப்புக்குரிய ஆசிரியனாய் ,கல்லூரி முகாமைத்துவத்தில் தனித்துவம் மிக்கவனாய் திகழும் கிருபாவை உருவாக்கிய வேலணை மத்திய கல்லூரித்தாய் அவன் சேவைதனை ஏற்று மனமகிழ்ந்து வாழ்த்திநிற்கிறாள். அன்னைநிழலில் அவனோடு யானுமாய் வளர்ந்துயர்ந்தோம் என்று பெருமை கொள்வதோடு 11 ஆண்டுகள் நிறைவான சேவைமூலம் எம்கல்லூரிச்சமூகத்தின் உள்ளங்களில் நிறைந்துநிற்கும் கிருபாவை அவர்களோடு சேர்ந்து யானும் வாழ்த்தி மகிழ்கிறேன்.
வாழ்த்துக்கள் .



## திரு. சிவகாமி கிருபாகரன் இலங்கை அதிபர் சேவை - (SLPS I) அவர்கள அரச சேவையிலிருந்து ஓய்வுபெறல் தொடர்பான வாழ்த்துச் செய்தி

திருஞானசம்பந்தபிள்ளை ஞானசுந்தரன்
வலயக்கல்விப் பணிப்பாளர் தீவக கல்விவலயம் வேலணை.

திரு.சிவசாமி கிருபாகரன் அவர்கள் 24.04.1989 ஆசிரியராக யா/ சரவணை நாகேஸ்வரி ம.வி இல் அரச சேவையில் இணைந்து யா/ தம்பாட்டி அ.த.க.பாடசாலை. யா/ வேலணை மத்திய கல்லூரி. மு/ மல்லாவி மத்திய கல்லூரி. திரு/ புனித மரியாள் கல்லூரி (தேசியப்பாடசாலை). யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (தேசியப் பாடசாலை) களில் கணித் பாட ஆசிரியராகக் கடமையாற்றிப் பின்னர் கணித பாட ஆசிரிய ஆலோசகராக 1 1/2 வருடங்கள் தமது சேவையை ஆற்றி. இலங்கை அதிபர் சேவையில் 27.05.2009 முதல் 31.05.2011 வரை யா/ இணுவில் இந்துக் கல்லூரியிலும் 01.06.2011 முதல் 09.06.2023 வரை யா/ வேலணை மத்திய கல்லூரியிலும் கடமையாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார். இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் இவர் சமூகப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். இவரது 12 வருட யா/ வேலணை மத்திய கல்லூரி சேவைக்காலத்தில் பாடசாலையிலுள்ள வறுமையான மாணவர்களுக்கு உதவுதல். அவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல், பரீட்சை வினாவிடைப் புத்தகங்கள் வழங்கல் என்பன குறிப்பிடத்தக்கவையாகும். தனது சேவைக்காலத்தில் தாய்லாந்து, தென்கொரியா நாடுகளுக்கு அரச புலமைப் பரிசில் பெற்று விசேட பயிற்சியினைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. 91 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்று உயர் கல்வி வாய்ப்புக்கள் பெற்றமை சிறப்பாகும். இதில் 9 மாணவர்கள் பொறியியல் பீடத்தில் தெரிவு செய்யப்பட்டமை ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலை வளாகத்தில் விருட்சவிழா மூலமாக மரநடுகை மேற்கொள்ளப்பட்டு பாடசாலைச் சூழல் இயற்கை எழிலுடன் விளங்குவது பாராட்டத்தக்கது. யா/ வேலணை மத்திய கல்லூரி எதிர் யா/ வசாவிளான் மத்திய கல்லூரி இடையிலான C.W.W [illegible] ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர் தனது ஓய்வுக்காலத்தில் குடும்பத்தினருடன் [illegible] சமூகச் செயற்பாடுகள் மேற்கொள்ளவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## அதிபர் சிவசாமி கி

| | |
|---|---|
| **ஆரம்பக் கல்வி** | - வேலணை ஆத்திசூடி வித் |
| **இடைநிலை கல்வி** | - யா/ வேலணை மத்திய க |
| **உயர் கல்வி** | - B,Sc யாழ்ப்பாணம் பல்க |
| **ஆசிரியர் நியமனம்** | - 1989. 04.24 |

**ஆசிரிய சேவை நிலையங்கள்**
**சேவை விபரம்**

* ஆசிரியர் சேவை நிலையங்கள்
* யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியால
* பலாலி ஆசிரியர் கலாசாலை
* யா/ தம்பாட்டி அ.த.க. பாடசாலை
* யா / வேலணை மத்திய கல்லூரி
* மு/ மல்லாவி மத்திய கல்லூரி
* திரு/ புனித மரியாள் கல்லூரி
* யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

**சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்** - வலிகாமம்

**அதிபர் சேவை**

யா/ இணுவில் மத்திய கல்லூரி - 2009.05.27 - 20
யா/ வேலணை மத்திய கல்லூரி - 2011.06.01 - 20

**வெளிநாட்டில் பெற்ற பயிற்சிகள்**

1. Profcssional Development Program for S National Academy for Educatio University.
2. Professional Development Program For Institute for International Education De and Human Resources Development Re
3. Facilitation of School - Assessment Bas of Technoloy, Thailand.




## வாழ்த்துச் செ

தம்பிராசா யுகேஸ்

அதிபர் கிருபாகரன் அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்
ஓய்வபெறுகின்றார். அவருடன் அறிமுகமும் கல்வி கற்கும் வாய்ப்பும் முதன் முதலில் கிடைத்தது
மாணவர்களையும், கல்வியியலாளர்களையும் மல்லாவி மத்தியகல்லூரி அரவணைத்துக்கொண்
தரப்பினரும் தம்மாலான பங்களிப்பை கல்கியிருந்தனர். கிடைக்கக்கூடிய வளங்களை கச்சித
நிதிவளத்தை பெருக்குவதிலும் அக்கறை காட்டவேண்டியிருந்தது. மதுர இரவுகள் என்ற கலை
நெறியாள்கை செய்திருந்தார் அவர் போன்ற ஆசிரியர்களின் பங்களிப்புடன் வெற்றிகரமாக நடந்
வர்தகப் பிரிவு மாணவர்களுக்கு அவர் நேரடியாக கற்பித்த போதும் ஏனைய துறை மாணவர்
இருந்தார். பாடசாலையிலுள்ள எல்லா மாணவரகளும் ஏதோ ஒரு இணைப்பாட விதான செயற்ப
மத்தியில் கட்டுப்பாடு, ஒழுங்கை நிலைநாட்டுவதுடன் சமூகத்திறனை வளர்ப்பதிலும் கிருபா ஆசிரி
பின்னரும் சமூகப்பணியாக மிளரவேண்டும் என் வாழ்த்துகின்றேன்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 10 . 1954



மறைவு 08 . 06 . 2023

## திரு. சிவஞானசுந்தரம் கணேசப்பிரகாஸ்

(இளைப்பாறிய இயந்திரவியல் பொறியியல் பீட கற்கை சிரேஷ்ட உதவி ஆசிரியர் - மொறட்டுவை பல்கலைக்கழகம்)

யாழ்ப்பாணம், தொல்புரம் வழக்கம்பரை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, தெஹிவளை, வெண்டவட் பிளேஸை இருப்பிடமாகவும் கொண்ட திரு. சிவஞானசுந்தரம் கணேசப்பிரகாஸ் கடந்த (08.06.2023) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், கணேசபிரகாஸ் சந்திரகுமாரி (இளைப்பாறிய வைத்தியர் - கொழும்பு தேசிய வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும், மாதங்கி (வைத்தியர் - மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை), ஜனனி (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபதர்சனின் (வைத்தியர் - மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை) அன்பு மாமனாரும், லீலாதேவி, விமலாதேவி, பத்மாதேவி, சதாசிவபிரகாஸ், நிர்மலாதேவி, துரையப்பா, சுசிலாதேவி, வாசுகி, காலஞ்சென்ற இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், விக்நேஸ்வரராஜா, சண்முகசுந்தரம் மற்றும் சண்முகநாதன், திலகேஸ்வரி, உதயபாலன் மற்றும் காலஞ்சென்ற ஜெயச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.06.2023) சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு நாளை (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்து சமயக்கிரியைகள் இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு பொரளை கனத்தை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 50764) AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 443 1860, 011 273 8978**

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 03 . 1942



மறைவு 05 . 06 . 2023

## திருமதி செல்வமணி சுந்தரலிங்கம்

மாவிட்டபுரம் கிழக்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வமணி சுந்தரலிங்கம் (சந்திரா) கடந்த (05.06.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - ருக்மணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னக்குட்டி - இளையபிள்ளை தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்புத் துணைவியும், ஜெகநாதன் (USA), ரகுநாதன் (Sri Lanka), காலஞ்சென்ற பத்மநாதன், சோதிநாதன் (Newzealand), யோகநாதன் (Canada) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பாலசிங்கம் (Canada), செல்லம்மா (Sri Lanka), காலஞ்சென்றவர்களான நாகம்மா, முத்தம்மா, கனகம்மா, பரமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிருஷ்ணபிள்ளை இரட்ணேஸ்வரி (Canada), சிவரட்ணம் ஜெகதீஸ்வரி (UK) ஆகியோரின் பாசமிகு உடன்பிறவாச் சகோதரியும், கிரிஷாந்தி (Canada), பிரஷாந்தி (France), மதன் (Newzealand), றொஷாந்தி (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயரட்ணம், அகிலன், ஜெயநேசன், அஜித்தா ஆகியோரின் அருமை மாமியாரும், விதுஷன், துர்க்கா, அபர்ணா, ஆதிஸ், ஆரபி, அபினாஸ், ரவிஷாந், துஷானி, தருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 50763) AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**

**076 982 6795**

# மரண அறிவித்தல்

## ஸ்ரீமதி சௌந்தராதேவி கணேசசிவசண்முகசர்மா

கொழும்புத்துறையைச் சேர்ந்த ஸ்ரீவத்ஸ ஸ்வர்க்கஸ்ரீ. தியாகராஜ ஐயர் கணேச சிவசண்முகசர்மா (முன்னாள் பிரதம காசாளர், ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம், முன்னாள் அர்ச்சகர்நல்லூர் சிவன் கோவில்) அவர்களின் அன்புத் துணைவி ஸ்ரீமதி சௌந்தராதேவி கணேசசிவசண்முகசர்மா நேற்று (09.06.2023) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதிக்குருக்கள் - புவனேஸ்வரிஅம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தியாகராஜஐயர் - இராஜராஜேஸ்வரிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சரஸ்வதிஅம்மா (அமரர்), சாம்பசிவஐயர் (அமரர்), பாலாம்பிகை அம்மா (அமரர்) + சிவராஜஐயர் (அமரர்), சுப்பிரமணியக்குருக்கள் (அமரர்) + அமிர்த குணவல்லி அம்மா (அமரர்), தங்கசாமிசர்மா (அமரர்) + அன்னபூரணி (அமரர்), இ.கணேசசர்மா (அமரர்) + இராஜலக்ஷ்மி, ஜெகதீஸ்வரி + வரதராஜசர்மா, குமாரசாமிக் குருக்கள் (அமரர்) + சாரதாதேவி (அமரர்), பரமேஸ்வரி (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகானந்தசர்மா (அமரர்) + கமலாதேவி, சிவகுமாரசர்மா + பிறேமாவதி, சியாமளாதேவி (அமரர்) + சரவணபவசர்மா (அமரர்), பாலசுப்பிரமணியக் குருக்கள்(அமரர்) + நாகேஸ்வரி, ராமேஸ்வரசர்மா (அமரர்) + சாந்தினி , ரமாராணி + உமாபதிசர்மா (அமரர்), சங்கரராஜக்குருக்கள் + சுகுமாரி (அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிருஷ்ணராஜா (முன்னாள் வட பிராந்திய முகாமையாளர், ஏசியன் பெயின்றஸ் (லங்கா லிமிட்டற்), சசிகலாதேவி, மனோ ரஞ்சிதம், பாலசரஸ்வதி, அனுராதா, மீனலோஜினி, இராஜேஸ்வரி (முன்னாள் ஆசிரியை- சத்தியசாயி பாடசாலை - மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தாயும் இந்திராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), ஸ்ரீதரசர்மா (ஓய்வூதியர், இலங்கை வங்கி), முத்துச்சாமிக்குருக்கள் (பிரதமகுரு, உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தானம்), இராமச்சந்திரசர்மா (அமரர்), முரளிதரக் குருக்கள் (பிரதமகுரு, அரியாலை சித்தி விநாயகர் தேவஸ்தானம்), சுந்தரேஸ்வரசர்மா (பிரதமகுரு, மாதகல் பாணாகவெட்டி புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானம், முன்னாள் உத்தியோகத்தர் இ.போ.ச, காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கி.யாதவராஜன்- யா.வைஷ்ணவி, கி.பார்க்கவன், ஸ்ரீ.கலாதரன்– க.பிரவீணா, ஸ்ரீ.ரிஷிகேசன் – ரி.சிந்துஜா, ச.காயத்திரி– வா.சக்திதரன், மு.சிவகோசரன்– சி.ஸ்ரீபத்மப்பிரியா, மு.இரகுநாதன்- இ.யசோதா, மு.ஜெகநாதன்- ஜெ.ரவிஜன்யா, இ.பார்த்திபன், க.ஸ்ரீவித்யா- கெ.கமலேஸ்வர சர்மா, மு.ஸ்ரீபிரணவரூபசர்மா - ஸ்ரீ.மாதுர்யா சு.பூர்வஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யா.தீட்ஷண்யா, க.பூஜிதா,க.வர்ஷிகா, க.கிருத்திக்ஸன், ரி.தனன்யன், ச.அக்ஷ்ரன், ச.அக்ஷிகா (அமரர்), சி.சுபேக்ஷணன், சி.சாருஜன், ஜெ.அபூர்வா, ஜெ.அபிநயா, க.ராஜாராம் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2023) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் இல. 27/4 இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம் எனும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



(CS/50768)AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**

**தோற்றம் 18.07.1934 மறைவு 09.06.2023**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 60 ஆவது அகவை தொடர்ச்சி......

## எமது அதிபர் கிருபாகரன்



**திருமதி திருமகள் கேதாரநாதன்**
**முன்னாள் பிரதி அதிபர்**
**வேலணை மத்திய கல்லூரி**

வேலணை மத்திய கல்லூரி அதிபர் திரு சிவசாமி கிருபாகரனுக்கு எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள் கிறேன் எமதுகல்லூரி வரலாற்றில் நீண்டகாலம் அதிபராகக் கடமையாற்றிய அதிபர்கள் வரிசையில்திரு வே. தம்பு அவர்கள், திரு. செ. குணபாலசிங்கம் அவர்கள் ஆகியோருக்குப்பின்னர் திரு.சி. கிருபாகரன் அவர்கள் சேர்ந்து கொள்கிறார். இவர் கல்லூரியில் மாணவனாகக் கற்றும் ஆசிரியராகக் கடமையாற்றியும் தற்போது அதிபராகச் சேவைசெய்தும் வருவதனால் மேலும் சிறப்படைகிறார். இவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வுறுகிறேன். பாராட்டப்படும் இந்த அதிபரின் அளவற்ற சேவைகள் உயர்ந்தநிலையில் வைத்துப் போற்றப்படவேண்டியன. அவற்றிற் சில பின்வருமாறு. இவரது சேவைக்காலத்தில் இடர்களும் சவால்களும் எமது பிரதேசத்தில் காணப்பட்டபோதும் இவர் தனக்கே உரித்தான திறமையாலும் முயற்சியாலும் பல வியத்தகு சாதனைகளைச்செய்து எமது கல்லூரியை மிக உயர்ந்த நிலைக்குக்கொண்டுவந்துள்ளார். கல்லூரியின் தோற்றம் குறிப்பாக, முன்முகப்புகள் குடாநாட்டில் வாழ்பவர்களுக்கு மட்டுமன்றிப் பிறநாட்டில் வாழும் தமிழர்களுக்கும் சமூகவலைத்தளங்களில் பதிவேற்றம் செய்பவர்களுக்கும் பார்வைக்குரிய காட்சிப் பொருளாயின. பாடசாலைக்குப் பலதிசைகளிலும் காணிகள் பெறப்பட்டு பாடசாலை எல்லைகள் விஸ்தீரணமாக்கப்பட்டன. வரண்டபகுதியொன்றில் இருந்த காய்ந்த நிலத்தோற்றம் மாற்றம்பெற்று பாடசாலைச்சூழல் பாலைவனத்தில் அமைந்த ஒரு சோலைவனமாயிற்று. கட்டடங்களும் கணினிகளும் பெருகின. குறிப்பாக, 'smart room' பௌதிகவள விருத்திக்கு இன்னொரு சான்றானது. மாணவர்கள் எண்ணிக்கை ஆச்சரியப்படத்தக்க வகையில் அதிகரித்தது. தீவுப்பகுதியிலிருந்து கல்விக்காக யாழ்ப்பாணஞ் செல்லும் தொற்றுநோய் குறைந்தது. குடாநாட்டிலிருந்து மட்டுமன்றி வன்னிப்பகுதியிலிருந்தும் மாணவர்கள் அறிவுக்குச் சிறந்த கல்வியும் வயிற்றுக்கு நிறைந்த உணவும் கிடைப்பதனால் விடுதியை நிரப்பத்தொடங்கினர். ஆசிரியர்களது ஆற்றல்களையும் சேவைமனப்பாங்கையும் அதிபர் பிழிந்தெடுத்ததுடன் தானுமே அல்லும் பகலும் ஆசிரியரானார். மேலதிக ஆசிரிய நியமனம் செய்யப்பட்டு, பயிற்சிப் புத்தகங்களும் தேர்வுகளும் வழங்கப்பட மாணவர் பெறுபேறுகள் தொடர்ந்து உயர்ந்தன. மருத்துவம், பொறியியல், வர்த்தகம், கலை எனச் சகல பீடங்களுக்கும் மாணவர் தெரிவாகினர். பரிசளிப்பு விழாக்களும் புலமைப்பரிசில்களும் வெகுமதிகளும் மாணவர்களென வரும் தத்தமது நிலைகளிலிருந்து பலபடிகளைப் பாய்ந்து ஏற வழிசெய்தன. விரிவாக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்ட மைதானத்தில் மாணவர்கள் பலவிதமான விளையாட்டுக்களை விளையாடச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன் பாண்ட் வாத்திய அணிவகுப்புடனான இல்ல விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமன்றி, பிறபாடசாலைகளுடனான போட்டிகளிலும் பங்குபற்றச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கும் விழாக்களுக்கும் அதிகாரிகளை மட்டுமன்றி நலன்விரும்பிகள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழையமாணவர்கள் முதலானோரை வரவழைத்துக் கௌரவித்து அவர்களின் நல்லாசிகளையும் பெற்றுக்கொடுத்து, தற்போதைய மாணவர்கள் தாமும் அவர்களைப்போல வளர வழிகாட்டினார் அதிபர் கிருபாகரன் அவர்கள். நகரப்புறத்தில் வயதுக்கொவ்வாத, தமது வாழ்க்கையைத் தாமே தொலைக்குஞ் செயல்களில் சில இளஞ்சிறார்கள் ஈடுபடும் பழக்கங்களை இங்கே அணுகவும்விடாமல் தாம் சமயவாழ்வு வாழ்ந்து இம்மையிலும் மறுமையிலும் ஈடேற்றம் பெறவும் வகுப்பில் சைவநெறியில் கற்பனவற்றைச் செய்முறையில் காண்பிப்பதற்குமாக அதிபர், ஸ்ரீ நடராசர் கோவிலைப் புனருத்தாரணஞ் செய்வித்துக் கும்பாபிஷேகம் நடத்தி மாணவர்களின் சமய ஈடுபாட்டைப் பன்மடங்காக்கினார். இந்தக் கைங்கரியங்களையெல்லாம் பழையமாணவர்களின், குறிப்பாகப் புலம்பெயர்ந்து வாழ்பவர்களின் வள்ளன்மையின்றிச் செய்திருக்கவேமுடியாது. அதிபர் கிருபாகரன் அவர்கள் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கும் ஆக்கபூர்வமான செயற்றிட்ட விண்ணப்பங்களும் நிறைவின்போது அல்லது கட்டங்கட்டமாக அனுப்பிவைக்கும் கணக்கறிக்கைகளும் அச்செயற்றிட்டங்களால் பெற்ற வெற்றிகள் சாதனைகள் பற்றிய பட்டியல்களும் பழைய மாணவர்களைத்

திருப்திப்படுத்தி வந்தமையால் அவர்கள் தொடர்ந்து ஊக்குவிக்கப்பட்டுத் தனிப்பட்ட நிலையிலும் கிளைச் சங்கங்கள் மூலமாகவும் இடைவிடாது அன்பளிப்புகளை அள்ளிவழங்குகின்றார்கள். இச்சமயத்தில் உலகளாவிவாழும் எமது அன்புக்குரிய பழைய மாணவர்களுக்கும் குறிப்பாக, அதிபரால் முன்வைக்கப்பட்ட செயற்பாட்டுக்கோ அல்லது நானே தொடக்கியதொரு செயற்பாட்டுக்கோ கேட்டபோதெல்லாம் கேட்டதொகையைத் தந்துதவுகின்ற எமது ஒஸ்ரேலிய, கிளையினருக்கும் சிறப்பாக அதன் தலைவர் திரு வைத்திலிங்கம் மோகனதாசனுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கிறேன். வேலணை மத்திய கல்லூரி கருக்கொண்ட காலமுதல் இன்றைய நாள்வரை எமது குடும்பத்துக்கும் இக்கல்லூரிக்கும் தொப்புழ்கொடியுறவுண்டு. எனது தந்தையார் பண்டிதர் ஆசிரியமணி .. மருதையனார் அவர்களுடைய காலத்தில் ஏற்பட்ட அவ்வுறவை இறுகப்பிடித்து நீடிப்பதற்கும் கல்லூரியின் பல்துறை வளர்ச்சிகளுக்குக் குறிப்பாக, காணிகளை அன்பளிப்பாக வழங்கியமையுட்பட எம்மாலான பங்களிப்பை நல்குவதற்கும் சந்தர்ப்பம் தந்தமைக்கு அதிபர் கிருபாகரனுக்கு எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகளைத்தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். எமது குடும்பத்துடன் மிக்க அன்புடனும் மதிப்புடனும் பழகிவந்த எனது நண்பர் தில்லைச்சிவனின் மைந்தன் கிருபாகரன். அனைவரும் போற்றும் உன்னத சேவையாற்றிப் பெருமைபெற்று ஓய்வுபெறுகின்ற இன்றையதினத்தில் அவரது ஓய்வுகாலம் சிறக்கவும் அவர் தனது குடும்பத்தினருடன் உடநலத்துடன் மகிழ்ந்துவாழவும் ஆசிகூறி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத நடராஜப்பெருமானின் ஆசிகளை வேண்டிக்கொள்கிறேன்.

## விற்பன்னன் கிருபாகரன்



**சுந்தரம்பிள்ளை கலாதரன்**
**முன்னாள் அதிபர்,**
**மெல்பண். ஒஸ்ரேலியா**

அதிபர் திரு சி. கிருபாகரனை ஒரு கல்வியாளனாக 1989 முதல் நான் நன்கறிவேன். தான் கற்பிக்கும் மாணவர்களினது மட்டுமன்றி முழு வேலணைப் பிரதேச மாணவர்களினதும் கல்வி வளர்ச்சியில் மிகவும் அக்கறைகொண்ட இளைஞனாக அப்போது அவர்செயற்பட்டார். பின்னர் அவருடன் இணைந்து ஒரே பாடசாலைகளில் பணிபுரியும் வாய்ப்புக்களும் எனக்குக் கிடைத்தன. அப்போது கிடைத்த அனுபவங்களின்படி அவர் மிகஉயர்ந்த நுண்ணறிவுத்திறன் கொண்டவர். நுணுக்கமானதும் கடினமானதுமானவிடயங்களை மாணவர்கள் இலகுவாக விளங்கிக்கொள்ளவும் பிரயோகப்படுத்தவும் வாழ்க்கையில் என்றுமே மறக்காமலிருக்கவும் ஏற்றவகையில் கற்பிக்கவல்ல ஆசிரியர். மேலும் அவர் ஒரு எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர், நாடகாசிரியர், நகைச்சுவை மன்னர். தான் சொல்ல வந்த கருத்தைத் தர்க்கரீதியாகப் பொருத்தமான சான்றுகளைக்காட்டி ஏற்கவைக்கவல்ல ஒரு விற்பன்னர் என்பவற்றை நான் அறியக்கூடியதாகருந்தது. இந்தக்காரணங்களால் இவர் உயர்தர மாணவர் மனதில் உயர்வான இடம் பிடித்திருந்த ஆளுமை மிக்க ஆசிரியராக விளங்கினார். வேலணை

மத்திய கல்லூரியிலும் மல்லாவி மத்திய கல்லூரியிலும் இவற்றை நேரில் கண்டு நான் பெரிதும் வியந்திருக்கிறேன். ஒரு பெரும் மாணவர்கூட்டமே அவர்பின்னால் அணிதிரளும். இவரிடம் கல்விகற்ற அனைவருமே இன்று உலகம் முழுவதும் மிகச்சிறந்த பிரசைகளாக விளங்குகிறார்கள். இவர் வேலணை மத்திய கல்லூரியில் அதிபர் பதவிவகித்தகாலத்தில் செய்த சாதனைகளையெல்லாம் பலர் கூறக்கேட்டதுடன் பலதடவைகள் நேரில்சென்று காணும் வாய்ப்பையும் பெற்றேன். வெளிநாடுகளில் வாழுகின்ற பழையமாணவர்களின் அனுசரணையினை முழுவதாகப்பெற்று எமது கல்லூரியின் தற்போதைய மாணவர்களுக்கு இவர் ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்புகள் உலகத்தரம் வாய்ந்தவை. பெற்றோர்கள் பெருந்தொகைப்பணத்தைச் செலவிட்டோ அல்லது தனியார் பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்தாலுங்கூடப் பெறமுடியாத வசதிகளும் சந்தர்ப்பங்களும் அம்மாணவரகளுக்குக் கிடைத்துள்ளன என்பதை நேரில் கண்டுகொண்டேன். இனிவரும் பல ஆண்டுகளுக்கும் அவ்வசதிகள் தொடர்ந்திருக்கும். அதிஷ்டமுள்ள பிள்ளைகள் பெற்றோர்கள். பாடசாலை முகாமையிலும் அதிபர் கிருபாகரன் ஒரு விற்பன்னரே! ஓய்வுபெறும் அதிபர் கிருபாகரன் தான் விரும்பும் நன்மைகளையெல்லாம் நிரம்பப்பெற்று தனது குடும்பத்தாருடன் இன்புற்றுவாழ அனுக்கிரகஞ்செய்யவேண்டி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ ஆனந்ததாண்டவமூர்த்தியின் திருப்பாதங்களை வணங்குகிறேன்.

## மனம் நிறைந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்



**கு.கணேசலிங்கம்**
**ஓய்வுநிலை அதிபர்,**
**வேலணை மத்திய கல்லூரி**


அதிபர் திரு.சிவசாமி கிருபாகரன் அவர்கள் தீவகத்தின் கல்வித் தாயாக மிளிரும் வேலணை மத்திய கல்லூரியில் சேவையாற்றி 10.06.2023ல் தனது 60வது வயதில் மணிவிழா காண்பதையும் அவர்தம் சேவைகளையும் பாராட்டி எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

இலவசக் கல்வியின் தந்தையான CWW கன்னங்கரா கல்வி அமைச்சர் அவர்கள் கிராமிய மக்களின் கல்வி வளர்ச்சிக்காக ஐந்தாம் தர புலமைப்பரிசில், விடுதி வசதிகள், நவீன வசதிகள் கொண்ட விஞ்ஞான தொழில்நுட்ப கூடங்கள், படிப்படியாக தாய்மொழிக் கல்வி என பல பிரமிக்கத்தக்க வசதிகள் கொண்ட மத்திய கல்லூரிகளை தேர்தல் தொகுதிக்கு ஒன்றாக அமைக்க வித்திட்டார். அத்தகைய கல்லூரிகளில் ஒன்று தான் வலிகாமம் வடமேற்கு தேர்தல் தொகுதிக்காக 1945ல் ஆரம்பிக்கப்பட்ட வேலணை மத்திய கல்லூரி. இதில் தீவகத்து மாணவர்கள் மட்டுமல்ல சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி, காரைநகர் மாணவர்களும் புலமைப் பரிசில் பெற்று விடுதிகளில் தங்கி கற்றனர். இங்கு கற்றவர்கள் ஆசிரியர்களாக, அதிபர்களாக, பல திறம்பட்ட கல்வியாளஉகளாக உருவாகி நாட்டிலும், உலகிலும் புகழைத் தேடித் தந்தனர், தருகின்றனர்.

திரு.கிருபாகரன் அதிபர் அவர்கள் இக்கல்லூரியின் மாணவராக, ஆசிரியராக, அதிபராக தனது கல்வி வகிபாகத்தைக் கண்டவர். இக்கல்லூரியில் எனது ஆசிரியர் சேவையில் மாணவராகவும், அதிபர் சேவைக் காலத்தில் ஆசிரியராகவும், ஓய்வுநிலை அதிபர் சேவைக்காலத்தில் அதிபராகவும் இவரைக் கண்டு களித்த நான் இவரை பாராட்டுவதிலும், வாழ்த்துவதிலும் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். அதிபர் திரு.வி.தம்பு அவர்களின் (1951-1963) பின்பு இவர் 12 வருடங்கள் (2011-2023) அதிபராகக் கடமையாற்றியவர். இப் 12 வருடங்களில் கல்லூரியையும், கல்லூரி வளாகத்தையும், விளையாட்டு மைதானத்தையும் நல்ல கல்விச்சூழல் நிலைக்கு கொண்டு வந்ததில் திரு.கிருபாகரன் அவர்களின் பங்கும் அளப்பரியது. எண்ணற்றவை. கல்லூரி ஆலயத்தை பிரதான மண்டப அமைப்பிற்கு ஏற்ப நீட்டி சுற்றுப் பிரகார வீதிகளை மண்டபங்களாக மாற்றி அழகுபடுத்தி தனது காலத்திலும் புனருத்தாரண மகா கும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்தார். நம் தமிழர் பாரம்பரியங்கள் வரலாறுகளைக் காட்டும் கல்விக் கண்காட்சியை நடத்தினார். மிக அண்மையில் கன்னங்கரா ஞாபகார்த்த சமர் என விளையாட்டுப் போட்டியை கன்னங்கரா அவர்களினால் உருவாகிய வசாவிளான் மத்திய கல்லூரி சமூகத்தினரை அழைத்து நடாத்தி கன்னங்கரா மத்திய கல்லூரிகளிடையே ஒரு பரந்துபட்ட புரிந்துணர்வை ஏற்படுத்தினார்.

இவை போன்றவை திரு.கிருபாகரன் அவர்களின் செயற்பாட்டுத் திறனுக்கு சில எடுத்துக்காட்டுகளாகும்.

திரு.கிருபாகரன் அதிபர் அவர்கள் 60 வயதில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார் எனினும் அவர் தம் சேவை தொடர வேண்டும். கல்லூரியின் ஓய்வுநிலை அதிபராகச் செயற்பட்டு கிராமங்களோடும், அளப்பரிய சேவைகளை ஆற்றிவரும் பழைய மாணவர் சங்கங்களோடும் இணைந்து நமது கல்லூரித் தாய்க்கு அவர் சேவையை ஆற்ற வேண்டும். அவர் தந்தை கவிஞர் தில்லைச்சிவன் அவர்களது வழிவந்த திறமையைக் கொண்டு தமிழ்க் கவிகளாலும், எழுத்துக்களினாலும், செயல்களினாலும் சிறப்படைய வேண்டும். இத்தகைய சிறப்புகளை பெற்று எமது கல்லூரி சிவகாமி சமேத நடராஜப் பெருமான் அருளால் அவர் நீண்ட சேவையாற்ற மனம் நிறைந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
**வாழ்நாள் பேராசிரியர் /**
**முன்னாள் துணைவேந்தர்.**

வேலணை மத்திய மகாவித்தியாலயத்தின் புகழ்பூத்த அபதிர் சிவசாமி கிருபாகரன் அவர்கள் நாட்டிலும், பிரதேசத்திலும் இடர்மிகுந்த காலப்பகுதிக்குள் 33 வருடங் களுக்கு மேல் கணித ஆசியர், ஆசிரிய ஆலோசகர், அதிபர் பதவிகளில் சிறப்பாகக் கடமையாற்றியது மிகவும் போற்றுவதற்குரியது. மேலும் இவர் கல்வி, இலக்கிய பாரம்பரிய குடும்ப பின்னணியைக் கொண்டவராகவும், வெளிநாட்டிலும் பயிற்சி பெற்ற வராக இருந்தது, பணிச் சிறப்புக்குக் காரணங்களாக இருக்கின்றன.

தீவகத்தின் முதல் நிலைக் கல்வி நிறுவனத்தின் அதிபராக இருந்து, மத்திய மாகா வித்தியாலயத்தை தனது பணிக்காலத்தில் பல்வேறு துறைகளில் மேம்பாடு அடையச் செய்துள்ளார். மேலும் 1996 இல் இருந்து பணிபுரிந்த அதிபர்கள் முன்னெடுத்த அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு மேலும் வலுச்சேர்த்தார். மத்திய மகா வித்தியாலயத்தின் மேம்பாட்டுக்கு உதவும் அமைப்புக்களின் நம்பிக்கைக்கு உரியவராக இருந்துள்ளார். ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்களினது மதிப்புக்கும் அன்பிற்கும் உரியவராக இருந்துள்ளார். இவர் மத்திய மகா வித்தியாலய அதிபர் பதவிக்கு அப்பால் தீவக வலயக் கல்விப் பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதிலும் தீர்ப்பதிலும் முன்னின்று உழைத்தவர். அதிபரின் உரிமைகள், அதிகாரங்களைப் பேணுவதில் உறுதியாக இருந்த பெருந்தகை.

## எங்கள் கிருபா சேர்.....



**உங்கள் அன்பு மாணவன்.**
**நிமலரஞ்சன்,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்(கல்வி அபிவிருத்தி)**
**மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம்.**

தாய்தந்தையர்க்கு அடுத்தநிலையில் குருவானவர் தெய்வமென போற்றப்படுகின்றார். எவ்வாறெனினும், ஒருவனின் வாழ்நாள் முழுவதற்கும் ஏற்ற பொருத்தமான கல்வியினை வழங்குபவரே நல்லாசிரியர். காலத்தில், பொருந்தக்கூடியதாகவும் எதிர்கால சவால்களுக்கேற்ப தம்மை இயைபாக்கிக்கொண்டு நிலைபேண்தகு அபிவிருத்தியுடன் (Sustainable Development) உயரிய வாழ்வியலோடு ஒன்றித்துப் போவதற்கும், ஏனையோரை வழிநடாத்தவும் தேடல் மற்றும் புதிய கண்டறிதலுடன் அனுபவரீதியானதும் புதுமைபுனைதலுடன் கூடிய கற்றல்சமூகத்திற்கான (learning Socity) அடித்தளமிடுவதற்கு பாடவிதானம் மாத்திரமல்ல ஆசிரியர் போதனை முறைமைகளும் (Pedagogy) முக்கிய காரணமாக அமைந்து விடுகின்றது. வன்னிப் பெருநிலப் பரப்பில் சொல்லொனா சவால்களுக்கு மத்தியில் தான் கற்பிக்க கிடைத்த மாணவச் செல்வங்களுக்கு சவால்களையே ஏணிப்படிகளாக்கி உயரச்செய்த ஆசிரிய வள்ளல்களுக்கு முன்னுதாரணமாக திகழ்பவர் எமது கிருபாகரன் சேர்(கிருபா சேர்), மல்லாவி மத்திய கல்லூரியின் மாணவர் மனதை வென்ற நல்லாசிரியர். இன்றைய உலகின் முக்கிய பேசுபொருளாக வலம்வரும் டேடா சயன்ஸ் (Data Science) இற்கு அடித்தளமாய் Statistic பாடத்தினை விருப்புடன் கற்க காரணமாக இருந்த ஆசிரியர். புதிய தலைமுறை ஆசிரியர்கள், பணியை செய்வதற்கு தடையாக கூறும் பல்வேறு சவால்களையும் தேவைகளையும் எண்ணிப்பார்க்கையில், பல்மடங்கு சவால்கள் இருந்தபோதும் தமக்கென்ற தனித்துவமான பண்புகளாலும் திறமைகளாலும் மாணவர்கள் மனதை வென்றதோடு அவர்களுக்கு ஏற்றாற்போல் கல்வி புகட்டியதன் விளைவு, இன்று உலகமெங்கிலும் உயர்தொழில் தகமையாளர்களாய் (Professionals) மற்றும் உன்னதமான நிலையில் மாணவச் செல்வங்கள் எங்கள் கிருபாகரன் நல்லாசிரியருக்கு உள்ளனர். நல்லாசிரியர் அவர்களின் ஓய்வுக்காலம் உன்னதமான பேற்றுடன் வளமாகவும் நலமாகவும் அமைய இறைவனை வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணிச்சல் மிக்க அ



**ஜே.எக்ஸ்.செல்வநாயகம்**
**பிரதி திட்டமிடல் பணிப்பாளர் , பிரதிப் பிரதம**
**(திட்டமிடல்)**

வேலணை மத்திய கல்லூரியில் உயர்தரம் மற்றும் யாழ் பல்கலைக்கழகத்திலும் சமகாலத்தில் கல்வி கற்ற வேலணை மத்திய கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்ற போது மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். கடந்த 12 வளர்ச்சியில் ஒளி விளக்காக திகழும் வேலணை மத்திய கல்லூரியை மீண்டும் பழைய புகழுக்கு நி நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.திரு.சிவசாமி கிருபாகரன் அவர்களின அமையவில்லை ஆரம்பத்தில் பல சாவால்களை எதிர் கொள்ள நேரிட்டது.

கல்வி நிர்வாகத்தின் ஒத்துளைப்பு எதிர்மறையானதாக இருந்தது. அதே போல் பழைய மாணவர் சங்கம் நான் பங்குபற்றிய பழைய மாணவர்கள் சங்க கூட்டங்களிலும் மற்றும் பல்வேறு பாடசாலை நிகழ்வுக கொண்ட பழைய மாணவ நண்பர்கள் மற்றும் ஊர் பெரியவர்களின் தார்மீக ஆதரவுடனும், எல்லோ பாடசாலையின் வளர்ச்சியும் ,அதனூடாக தீவக மாணவர்களின் கல்வி வளர்ச்சியையுமே முக்கிய குறி கடமையாற்றியது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். தனது பணிக்காலத்தில் பல தீவக ஏழை மாணவர்களி சமைத்து கொடுத்த பெருமை அவரின் சேவைக்கு எடுத்துக்காட்டாக விளங்கின்றது.

மொத்தமாக 91 மாணவர்கள் இவரின் சேவைக் காலத்தில் பல்கலைக்கழகம் சென்றுள்ளார்கள் அதில் 09 அறுபதாவது அகவையில் ஓய்வு பெறும் நண்பன் கிருபாவை வாழத்துவதோடு அவர் ஓய்வுக்காலத்திலும் க நிற்கின்றேன்.

## வாழ்த்துச் செய்தி



**திரு. சி. சுகுமாரன்**
**ஓய்வுபெற்ற உ.க.ப. (கணிதம்)**
**வலிகாமம் கல்வி வலயம்.**

வலிகாமம் கல்வி வலயத்தில் கணித பாட சேவைக் கால ஆசிரிய ஆலோசகராக கடமை பார்ப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் புதிய கல்விச் சீர் திருத்தம் ஏற்படுத்தப்பட்டு, கணித ப கல்வி அமைச்சு தொடர்ச்சியாக ஆசிரியர்களுக்கு செயலமர்வுகள் நடத்தப்பட்ட காலம். உள்வாங்கி இலகு முறையில் ஆசிரியர்களுக்கு செயலமர்வுகளை நடத்தி அதில் வெற் பாடசாலை தரிசனங்களின்போது கணித பாட ஆசிரியர்களுக்கு மாதிரி வகுப்புகளை பெரிதும் உதவினார்.

கால ஓட்டத்தில் வலிகாமம் கல்வி வயலத்தில் பாடசாலை அதிபராக உயர்ந்து.

பின்பு தனது சொந்த ஊரில் யா / வேலணை மத்திய கல்லூரி அதிபராக பொறுப்பேற்ற ஓய்வுபெறும் கல்வியியலாளனை வாழ்த்தி. மேலும் ஓய்வுகாலத்தில் கல்விச் சேவை வாழ்த்துகின்றேன்.

## கோட்டக் கல்வி அலுவலரி



**திரு. கார்த்திகேயஐயர் சசிதரன்,**
**கோட்டக் கல்வி அலுவலர்,**
**வேலணை.**

யாழ் தீவகக் கல்வி வலயம் - வேலணைக் கல்விக் கோட்டத்தில் உள்ள வேலணை மத்திய கல்லூ 09.06.2023 இல் நிறைவு செய்து ஓய்வுபெறுகின்றார். இவர் தனது அரச சேவையினை 1989.04.24 இருபது வருடங்களாகப் பல பாடசாலைகளில் ஆசிரியப் பணியாற்றியதுடன் சிறிது காலம் கணித பாடத்து அதிபராகவும் கடமையாற்றியும் உள்ளார். இவர் தனது சேவைக்காலத்தில் கற்பித்தல் மற்றும் நிர்வ பலவற்றையும் ஆற்றியுள்ளார். அந்த வகையில் நாடகங்கள், கவிதைகள், ஆய்வுக் கட்டுரைகள் எ மேடையேற்றியும் உள்ளார். அதுமாத்திரமன்றி சமூக, சமயப் பணிகள் பலவற்றிலும் மன விருப்பத் ஆரோக்கியத்துடன் அமைய இறையருளை வேண்டி வாழ்த்தியமைகிறேன்.

## வாழ்த்துச்செய்தி



**கலாநிதி சபாரட்ணம் அதிரதன்**
**தலைவர், கொழும்புப் பழைய மாணவர் சா**
**சிரேஸ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்க**

எமது கல்லூரியில் ஏறத்தாள கடந்த 12 வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி பணி ஓய்வு பெறும் தி பத்திரிகைப் பிரசுரத்துக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். ஏனைய நிறுவ பணியாகும். ஆயிரக்கணக்கான ஆளுமைகளை அவர்களது தனித்துவங்களையும் விருப்பங்களையும் நி நிறைந்த ஒரு பணியாகும். நிர்வாக நடவடிக்கைகளை மட்டுமன்றி வேறுபாடான ஆளுமைகளை முகா மட்டங்களுக்குப் பொருத்தமான தேர்ச்சிகளை அடையச் செய்வது மற்றும் உடலியல் விருத்தியை அடை சிக்கலான ஒரு பணியாகும். இவ்வாறான ஒரு சவால் நிறைந்த பணியை திரு சிவசாமி கிருபாகர யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு தீவகத்தில் உள்ள வேலணை மத்திய கல்லூரியின் அதிபராக பணியென்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். பாடசாலை நேரத்துக்குமப்பால் தினமும் பல மணி நேர குடும்பத்துடன் செலவிட வேண்டிய அருமையான தருணங்களை தியாகம் செய்தே இதனை அவர் செ கொண்டே அவர் நிறைந்த சவால்களுக்கு மத்தியிலும் இப்பணியை பொறுப்பேற்று அதனை செவ்வனே நி பாடசாலையாக கட்டியெழுப்ப வேண்டும் என்று எண்ணியவர் அதற்காக அர்ப்பணிப்பாக உழைத்தவர் வகையில் செயற்பட வேண்டும் என்பதையும் பதிவு செய்து கொண்டு, இன்று ஓய்வு பெறும் அதிபர் திரு சி ஆரோக்கியமானதாகவும் அமைய வேண்டும் என்று பார்வதி சமேத நடராஜப் பொருமானை வேண்டி நிற்

## அகவை அறுபதில் அதிபர் கி



**அன்புடன்**
**சி. இளஞ்செழியன்**

தான் கல்விகற்ற வேலணை மத்திய கல்லூரியில் பன்னிரு ஆண்டுகள் அதிபராக அகராத சேவை புரிந் 09.06.2023 அன்று ஓய்வுபெறும் எனது.அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய நண்பர் திரு. சிவசாமி கிரு பேருவகையும் அடைகின்றேன். தமிழராகிய எமது வாழ்க்கை வட்டம் பஞ்சாங்கக்கணிப்பிற்கு உட்பட் சுற்றுவட்டாகப் பஞ்சாங்கதில் நேர்த்திகாக வகுக்கப்பட்டுள்ளது.இதன் காரணமாக ஒருவர் தாம்பிறந்த பெ செய்கிறார். அவ்வேளையில் பொது வாழ்வினை அவரது அர்ப்பணிப்பு, பதவிக்காலத்தில் செய்த தன் அவர்களின் பாராட்டப்படுகிறார். இதுவே மணிவிழாவின் தத்துவமாகும். இவ்வகையில் அதிபர் கிருபா அ வகித்த கல்லூரிச் சமூகம் இவருக்கும் பாராட்டுச் செய்தி வெளியிடுவது காலப்பொருத்தமானது. இதற்காகத்

நன்றியுடன் பாராட்ட கடமைப்பட்டுள்ளே

"புகழ்புரிந்த இல் இலார்க்கு இல்
இகழ்வார் முன் ஏறுபோல் பீடுந

என்ற குறள்வரிகளுக்கிணங்க அதிபர் கிருபா அவர்களது முயற்சிகளுக்கு என்றும் நற்றுணையாக வி இவர்களது பிள்ளைகயையும் பாராட்டி நனறி கூறுவதுடன் நண்பர் கிருபா பல்லாண்டுகள் நோய் நொடியி எழுந்தருளியிருக்கும் சிவகாமி சமேத நடராஜப்பெருமான் அருள்பாலிக்கவேண்மெனப் பிரார்த்திக்கின்றே உள்ளம் அமைதிபெறுக ! விழைவது பெறுக! வெற்றிசூழ்க!


## வாழ்த்துச் செ



**Eng.S. நிமலன் சுடர் (மாணவன்)**
**Software Engineer - Facebook.USA.**

மல்லாவியில் எனது க.பொ.தா. உயர்தர (1989) கல்வியை கற்று தற்போது அமெரிக்கா, கலிபோர்னியாவி யாழ் இடம்பெயர்வுக்கு (1995) பின், மல்லாவியில் எமக்கு தூய கணித கற்று தந்தவர் ஆசிரியர்கள இடம்பெயர்வுக்கும் போருக்கும் மத்தியில், அவற்றை தயார் படுத்தி எமக்கு கற்பித்தவர் எமது ஆசிரியர். ஆ கற்ற "சார்புகள்" (கரவெட்டி வைரவர்) என்ற பாடம் "பசு மரத்து ஆணிபோல" இன்றும் எம் நினைவில் உள் தோழமையாக, உலக விடயங்களையும் பேசவும், ஆராயவும் இடமளித்த எமது ஆசியுரை நீடூழி வாழ இ

## வணக்கம் கிருபா ஆசிரியர் அவர்களே! தாங்



**Eng.S. சிவகுலம் (மாணவன்)**
**Chief Engineer, Department of Transportation, C**

எனக்கும் உங்களுக்குமான பழக்கம், நாங்கள் இடம்பெயர்ந்து மல்லாவியில் வசித்த எல்லாவற்றையும் எளிதாக அணுகும் பாங்கும், உங்களை நான் முதலில் மல்லாவி மத்திய க உங்களை ஒரு தோழமையுடன் கூடிய ஆசிரியராகவே கண்டுகொண்டேன், ஒரு சிறுகா இருந்தாலும், அது எனது வாழ்க்கைக்கு ஒரு பெரிய அடித்தளமாக அமைந்தது. என் போ காரணமாக இருந்துள்ளீர்கள். நன்றிகள்! அடுத்து மிகப் பிரதானமாக நான் இங்கே கு நாடகவியல் நாங்கள் கணிதப்பிரிவு மாணவர்களாக இருந்தாலும், எங்களுக்கு நீங்கள் புக மிகப்பெரிய துணையாக உள்ளது. அந்த வகையில், நான் உங்களுக்கு என்றும் கடமைப் உங்களை என்றும் வாழ்த்துவார்கள், வணங்குவார்கள். உங்கள் அளப்பரிய சேவை இன்பமாகவும் சுகமாகவும் இருக்க இறைவனை வேண்டுகிறேன்.

## ல் மிக்க அதிபர்

, பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம்

லத்தில் கல்வி கற்றதால் நெருங்கிய நட்பு கொண்ட திரு.சிவசாமி கிருபாகரன் அவர்கள் 2011ம் ஆண்டு
டந்தேன். கடந்த 12 வருடங்களுக்கு மேலாக கல்லூரியை நிர்வகித்து தீவக மாணவர்களின் கல்வி
மைய புகழுக்கு நிகராக நிலை நிறுத்திய பெருமை நண்பன் கிருபாவுக்கு உரியதாகும் அதற்காக
கரன் அவர்களின் அதிபர் சேவைக்காலம் வேலணை மத்திய கல்லூரியில் இல்குவானதாக

மாணவர் சங்கம் மற்றும் ஊர் பிரமுகர்களின் அழுத்தம் என பல நெருக்கடிகளை எதிர் கொண்டதை
டசாலை நிகழ்வுகளிஊடாகவும் உணரக் கூடியதாக இருந்ததது. இருந்தபோதும் பல நல் உள்ளம்
வுடனும், எல்லோரையும் அனுசரித்து, பிரச்சனைகளை கண்டு துவண்டு விடாமல் எதிர் கொண்டு
யுமே முக்கிய குறிக்கோளாக கொண்டு செயல்பட்டதனால் ஓய்வு பெறும் காலம்வரை கல்லூரியில்
ரழை மாணவர்களின் கல்விப் பசிக்கு அறிவூட்டி பல மாணவர்களை பல்கலைக்கழக கல்விக்கு வழி

ளார்கள் அதில் 09 மாணவர்கள் பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இன்று தனது
ய்வுக்காலத்திலும் கல்விப்பணி செய்து மகிழ்சியாகவும், உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்தி

## த்துச் செய்தி

)

ாசகராக கடமைபுரிந்த திரு. சிவசாமி கிருபாகரன் அவர்களின் சேவையை மீட்டுப்
ப்பட்டு. கணித பாடத்தில் அம்மாற்றங்கள் மாணவர்களைச் சென்று அடைவதற்கு
தப்பட்ட காலம். திரு.சி.கிருபாகரன் அவர்கள் இம் மாற்றங்களை உடனுக்குடன்
தி அதில் வெற்றியும் கண்டார்.
ரி வகுப்புகளை தாமே மேற்கொண்டு ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு

பர்ந்து.
க பொறுப்பேற்று பல் துறைகளில் சிறப்பாக செயற்பட்டு அரச சேவையில் இருந்து
கல்விச் சேவையை தொடரவேண்டும் என்றுகேட்டு சீரும் சிறப்புடன் வாழ

## அலுவலரின் வாழ்த்து

ரன்,

ண மத்திய கல்லூரியின் அதிபர் திரு சிவசாமி கிருபாகரன் அவர்கள் தனது அரச சேவையினை
னை 1989.04.24 இல் யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக ஆரம்பித்து
ம் கணித பாடத்துக்கான சேவைக் கால ஆசிரிய ஆலோசகராவும் பின்னர் பதின்னான்கு வருடங்கள்
தல் மற்றும் நிர்வாகப் பணிகளுடன் மட்டும் தன்னை நிறுத்திக்கொள்ளாது இலக்கியப் பணிகள்
க் கட்டுரைகள் எனப் பலவற்றை எழுதியதுடன் நாடகங்கள் பலவற்றை நெறியாள்கை செய்து
லும் மன விருப்பத்துடன் தன்னை ஈடுபடுத்தியும் வருகிறார். இவரது ஓய்வுக் காலம் உடல், உள

## துச்செய்தி

ன்
ய மாணவர் சங்கம்
காழும்பு பல்கலைக்கழகம்

ணி ஓய்வு பெறும் திரு சிவசாமி கிருபாகரன் அவர்களின் சேவையை கௌரவித்து வெளியிடப்படும்
. ஏனைய நிறுவனங்களைப் போலன்றி பாடசாலைகளை நிர்வகிப்பது மிகவும் சவால் மிக்க ஒரு
ருப்பங்களையும் நிராகரிக்காத வகையில் ஒன்றிணைத்து முகாமைத்துவம் செய்வது மிகவும் சவால்
முமைகளை முகாமை செய்வது அதற்குமப்பால் அவர்களது ஆளுமையை விருத்தி செய்வது, வயது
விருத்தியை அடைவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதென பாடசாலைகளின் முகாமைத்துவம்
சிவசாமி கிருபாகரன் அவர்கள் ஏறத்தாள கடந்த 20 வருடங்களாக ஆற்றிவந்துள்ளார். அதுவம்
ரியின் அதிபராக 12 வருடங்களுக்கும் மேலாக பணியாற்றுதல் என்பது எத்துணை சவாலான
ம் பல மணி நேரங்களை மேலதிகமாக செலவிட நேர்திருக்கும் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.
இதனை அவர் செய்து முடித்துள்ளார். தீவகத்தில் உள்ள ஆளணி வள பற்றாக்குறையை மனதிற்
னை செவ்வனே நிறைவேற்றி இன்று பணி ஓய்வு காண்கிறார். எமது பாடசாலையை மிகச் சிறந்த ஒரு
பாக உழைத்தவர். எதிர் காலத்தில் புதிதாக வரவுள்ள அதிபர் அவரது கனவுகளை நனவாக்கும்
றும் அதிபர் திரு சிவசாமி கிருபாகரன் அவர்களின் ஓய்வுக் காலம் சிறப்பாகவும் அமைதி மிக்கதாகவும்
னை வேண்டி நிற்கின்றேன்.

## அதிபர் கிருபா அவர்கள்

கராத சேவை புரிந்து நீண்ட காலம் அதிபராகக் கடமையாற்றியர் என்ற சாதனையை நிலையாட்டி
திரு. சிவசாமி கிருபாகரன் அவர்களை அவரது மணிவிழாவில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியும்
ணிப்பிற்கு உட்பட்டது. ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒவ்வொரு பெயர் சூட்டி அறுபது ஆண்டுகள் ஒரு
வர் தாம்பிறந்த பெயருள்ள ஆண்டுக்குள் மீண்டும் நுழையும்போது அறுபது ஆண்டுகளைப் பூர்த்தி
த்தில் செய்த தன்னலங்கருதாதசேவை, சமூக சமயப்பணி போன்றவற்றைக் கருத்தில்கொண்டு
ில் அதிபர் கிருபா அவர்களின் சேவை மனப்பான்மையை மதித்து வலிந்து இவர் அதிபராகப் பதவி
மானது. இதற்காகத் தமது பொன்னான நேரத்தைச் செலவிட்ட ஆசரியப் பெருந்தகைகளை
கடமைப்பட்டுள்ளேன்.
இல் இலாக்கு இல்லை
ன் ஏறுபோல் பீடுநடை"
நற்றுணையாக விருந்து பங்காற்ற வரும் மனைவி திருமதி ரமணி கிருபாகரன் அவர்களையும்
ள் நோய் நொடியின்றித் தனது ஓய்வுகால வாழ்வைத் மகிழ்வுடன் வாழ எமது கல்லூரி வளாகத்தல்
பிரார்த்திக்கின்றேன்.

## ாழ்த்துச் செய்தி

A.

ா, கலிபோர்னியாவில் உள்ள ஒரு மென்பொருு நிறுவனத்தில், பொறியியலாளராக பணியாற்றுகிறேன்.
ந்தவர் ஆசிரியர்களில் ஒருவர் கிருபா ஆசிரியர். புதிய பாடத்திட்டம் அறிமுகம் செய்ய நேரத்தில்,
எமது ஆசிரியர். ஆசிரியரின் இந்த முயற்சிக்கு நாம் என்றும் கடைமை பட்டுள்ளோம். அன்று அவரிடம்
ம் நிலையில் உள்ளது என்றால் அது மிகையாகாது. கல்வி கற்பித்தலுடன் நின்றுவிடாது, எம்முடன்
ரை நீடூழி வாழ இறைவனை வேண்டுகிறேன்.

## களே! தாங்கள் ஓய்வு பெறுவதாக அறிந்தேன்!

sportation, California.USA.

வியில் வசித்த போதுதான் ஆரம்பித்தது. தங்களுடைய நட்பாக பழகும் குணமும்,
ல்லாவி மத்திய கல்லூரியில் சந்தித்த உடனேயே பிடித்துப் போனது. அன்றிலிருந்து நான்
ன். ஒரு சிறுகாலம் தங்களிடம் தூயகணித பாடம் படித்தேன். அது ஒரு சிறு காலமாக
மந்தது. என் போன்ற பல்லாயிரம் மாணவர்களின் உயர்ச்சிக்கு நீங்கள் அடிப்படைக்
நான் இங்கே குறிப்பிடுவது என்னவென்றால், உங்களிடம் நாங்கள் கற்றுக்கொண்ட
ருக்கு நீங்கள் புகட்டிய நாடக கற்கை. எனக்கும், என் போன்றோருக்கும் இன்றும் ஒரு
என்றும் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். என் போன்று பல்லாயிரம் மாணவர்கள்
ளப்பரிய சேவைக்கு நன்றிகள். தங்களுடைய ஓய்வுக்கு அடுத்துவரும் காலங்கள்

## வேலணை பிரதேச செயலாளரின் வாழ்த்து



**திரு. கயிலாயபிள்ளை சிவகரன்.**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம் வேலணை**
**க.சிவகரன் பிரதேச செயலாளர் பிரதேச செயலகம் தீவகம் தெற்கு, வேலணை.**

சப்த தீவுகளுள் ஒன்றான ஊர்காவற்றுறையில் உள்ள வேலணை பிரபல பாடசாலைகளுள் ஒன்றான யா/ வேலணை மத்திய கல்லூரியில் 12 வருடங்களாக அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறும் திரு. சிவசாமி கிருபாகரன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். 20 வருடங்கள் ஆசிரியராகவும் 14 வருடங்கள் அதிபராகவும் கல்விச் சேவையாற்றியுள்ள இவர் தனது ஆசிரியப்பணிக் காலத்தில் அர்ப்பணிப்புடனும் துடிப்புடனும் பணியாற்றியவராவார். நீண்ட கல்விப் பாரம்பரியத்தினையும் கலை வரலாற்றினையும் கொண்ட தீவகம் தெற்கு வேலணை பிரதேசத்தின் முக்கியமான பாடசாலையாகிய யா/வேலணை மத்திய கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய காலங்களில் செயல் வீரனாக திகழ்ந்தார். மாணவர்களின் கல்வியில் அதிக அக்கறை காட்டியுள்ளதுடன் கல்விச் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மட்டுமல்லாது செயற்பாடுகளிலும் அதிக அக்கறை கொண்டு ஆசிரியர்களையும் மாணவர்களையும் வழிப்படுத்தியுள்ளார். விளையாட்டுத்துறையிலும் பல போட்டிகளில் மாணவர்களை பங்குபற்றச் செய்து பல வெற்றிகளையும் ஈட்டுவதற்கு. ஊக்கப்படுத்தியுமுள்ளார். ஒவ்வொரு ஆசிரியர்களையும் மாணவர்களையும் தனிப்பட அறிந்து கொண்டுள்ளதுடன் ஆசிரியர்களையும் அவரவர் துறைகளினை அறிந்து வழிப்படுத்தியுள்ளார் இதற்கு உதாரணமாக இப்பாடசாலை மாணவர்களின் "ஜிம்னாஸ்ரிக்" உடற்பயிற்சி நிகழ்வு அமைந்துள்ளமை பாராட்டத்தக்கதாகும். இவர் இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய காலங்களில் விசேட செயற்றிட்டங்களாக "வீடு தேடி வரும் பள்ளி". மாணவர்கள் கற்பதற்கான வீட்டுப் பயிற்சிகள் வழங்கல், கற்றல் உபகரணங்கள் வழங்கல், பரீட்சை வினாவிடைப் புத்தகங்கள் வழங்கல் போன்ற செயற்றிட்டங்களையும் மற்றும் வறிய மாணவர்களை கண்டறிந்து அவர்களின் கற்றலுக்காகன தேவைகளினையும் நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் கல்வித்துறையில் மட்டுமல்லாது பாரம்பரியக்கலைகளிலும் அக்கறை கொண்டு நாடகங்களிலும் நடித்துமுள்ளார் வேலணையில் பல சிறந்த கல்விமான்களை உருவாக்கவும் இப்பிரதேசத்தின் பெருமைகளினை அழிய விடாது பாதுகாக்கவும் உழைத்துள்ளமை கண்கூடு. நிறுவனங்களுடன் பல இணைந்து சமூகப்பணிகளையும் ஆற்றியுள்ளார் இவரது பணிக்காலத்தில் ஏற்பட்ட சவால்களுக்கு முகங்கொடுத்து எந்தத் தடைகளையும் தகர்த்தெறிந்து துணிவடன் பணியாற்றியுள்ளதுடன் எதற்கும் அஞ்சாத செயல் வீரனாகவும் திகழ்ந்துள்ளார் இவர் நீண்ட ஆயுளினையும் ஆசிகளையும் பெற்று மென்மேலும் சிறந்திடவும் இவரது ஓய்வுக்காலம் சிறப்புள்ளதாக அமைந்து சகல வளங்களினையும் பெற்று சீருடனும் சிறப்புடனும் வாழ வாழ்த்துக்களினையும் கூறி நிற்கின்றேன்.

## வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - பிரித்தானியா

ஒரு தசாப்தத்திற்கும் மேலாக எங்கள் கல்லூரி தாயின் அதிபராக பணியாற்றி பிறந்த நாள் மணிவிழாக்காணும் எங்கள் அதிபர் திரு.சிவசாமி கிருபாகரன் அவர்களுக்கு எங்கள் வாழ்துக்களை மனமுவந்து தெரிவிக்கின்றோம்.

## பன்முக ஆற்றலுள்ள அதிபருக்கான வாழ்த்துச் செய்தி



**கலாநிதி .அமிர்தலிங்கம்**
**ஓய்வு பெற்ற**
**பீடாதிபதி கலாநிதி**

எனது அன்பு மாணவனும் நண்பனும் அதிபருமாகிய சிவசாமி கிருபாகரன் அவர்களின் பணிநயப்பிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். சமூகப்பற்று, சிறந்த எழுத்தாற்றல், சிறந்த பேச்சாற்றல், சிறந்த கவியாற்றும் திறன், சிறந்த தொடர்பாடல் திறன், சிறந்த வரவேற்கும் தன்மை, சிறந்த நிர்வாகத்திறன், சிறந்த விழுமியப்பண்பு, ஆன்மீக ஈடுபாடு போன்ற பன்முக ஆளுமையுள்ள அவர் பல பாடசாலைகளில் கற்பித்த அனுபவத்துடனும் உள்நாடு, வெளிநாடுகளில் பெற்ற பயிற்சிகளின் ஊடாகவும் வேலணை மத்திய கல்லூரியின் மிகச் சிறந்த அதிபராக 12 வருடங்கள் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியது மிக்வும் வரவேற்கத்தக்கது. அவரின் சிறந்த தொடர்பாடலினூடாக உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கத்தின் உதவிகளைப் பெற்று கல்லூரியின் பௌதீக வளங்களை உயர்த்தியதுடன் மாணவர்களுக்கு பல உதவிகளைப்பெற்றுக் கொடுத்து ஊக்கப்படுத்தியதுடன் கல்லூரிக்கு சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுத்து மாணவர்களை மருத்துவபீடம், பொறியியல் பீடம் போன்ற பீடங்களிற்கு அனுப்பிய பெருமை கிருபாவின் சிறந்த நிர்வாகத்திறனிற்கு எடுத்துக்காட்டாகும். கல்லூரி நிர்வாகச் செயற்பாடுகளில் நேர்மையாகவும் நிதானமாவும் கல்லூரிக்கு களங்கம் ஏற்படாத வகையில் மற்றவர்களுக்கு முன் உதாரணமாகச் செயற்பட்ட சிறந்த ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட பண்பாளன் என்று சொன்னால் மிகையாகாது.

கல்லூரி மாணவர்களின் நிர்வாகம்சார், கல்விசார், இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து கல்லூரித் தாய்க்கு அளப்பரிய சேவையாற்றி ஓய்வு பெறும் மாண்புறு பெருமகன் ஓய்வுக்காலத்தில் நீண்ட ஆரோக்கியத்துடனும் சீரும் சிறப்புடனும் தனது குடும்பத்தினருடன் இன்றுபோல் என்றும் நிறைவாக வாழ்வதோடு தொடர்ந்தும் கல்விப்பணியையும், சமூகப்பணியையும் வழங்க புளியங்கூடல் செருத்தளம்பதி ராஜா மகாமாரி அம்பாளின் பாதம் பணிந்து எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

## வாழ்த்துரை



"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டறைக் கல்"

**கலாநிதி, பண்டிதர், சைவப்புலவர்**
**கலாபூஷணம், ஞானவியன்மணி**
**செ.திருநாவுக்கரசு (ஆசிரிய கலாசாலை ஓய்வுநிலைப் பிரதியதிபர்)**

என்றார் திருவள்ளுவப் பெருந்தகை. பொருத்தமான அதிபரொருவர் கிடைக்காமல் வேலணை மத்திய கல்லூரிச் சமூகம் தவித்துக் கொண்டிருந்த போது பலரது வேண்டுகோளையும் ஏற்றுக் கல்லூரி அதிபர் பொறுப்பையேற்றுப் பன்னீராண்டுகள் அக் கல்லூரியையும் தாய்வீடாகக் கருதித் தன்னால் முடிந்த வரைக்கும் சகல துறைகளிலும் வளர்ச்சி காணச் செய்து இன்று 60 வயது நிறைவில் ஓய்வுபெறுபவர் தான் எமது பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய உயர்திரு. சிவசாமி கிருபாகரன் அவர்கள். எனது ஆசானின் புதல்வனாகிய அவரது பணிகளைப் போற்றுவதுடன் எதிர்காலம் இல்லறத்தாருடன் ஒளிவீசிச் சிறக்கவும் வாழ்த்துகின்றேன். உடல் - உள ஆரோக்கியத்துடன் இன்னும் தொடர்ந்து கல்விச் சமூகப் பணிகளிலீடுபட எல்லாம் வல்ல பரம்பொருள் துணையாயிருக்கப் பிரார்த்திக்கின்றேன்.

## வாழ்த்ச் செய்தி



**பிரதம பொறியியலாளர் (பரிமாறலும் பராமரிப்பும்)**
**இலங்கை மின்சார சபை,**
**யாழ்ப்பாணம்.**

நாம் 1995 இல் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து மல்லாவிக்கு சென்றிருந்தபோது திரு சி. கிருபாகரன் ஆசிரியரிடம் கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தது.திரு கிருபாகரன் ஆசிரியர் அவர்கள் மாணவர்கள் எந்தெந்த நிலையில் உள்ளனர் என்பதை அறிந்து அவர்களுக்கு ஏற்றால்போல் கற்பிப்பதில் ஒரு விற்பனர். திரு கிருபா ஆசிரியர் கற்பித்தலுடன் மட்டும் நின்றுவிடாமல், இணைபாடவிதான செயற்பாடுகளிலும் மிகுந்த ஆர்வத்தை காட்டி செயறபட்டு வந்தவராவார். இதற்கு சிறந்த் உதாரணமாக மல்லாவி மத்தியகல்லூரிக்கு நிதிதிரட்டும் முகமாக நடாத்தப்பட்ட "மதுர இரவு" எனும் நிகழ்ச்சில் "இன்னும் துயிலுதியோ" எனும் நாடகத்தை வெகு சிறப்பாகவும் நேர்த்தியாகவும் இயக்கியிருந்தார். இது இவரது ஆளுமையை பறைசாற்றி நின்றது. கற்பித்தல் என்பது ஒரு கலை. கடினமான விடயங்களையும் சுவைபடக் கற்பிப்பதில் திரு. கிருபா ஆசிரியர் அவர்களின்ஆளுமை முழுமை பெற்றிருந்தது இவர் தூயகணிதபாடத்தை எமக்கு கற்பித்த அதேவேளையில் வர்த்தக பிரிவு மாணவர்களுக்கு புள்ளிவிபரவியலையும் கற்பித்திருந்தார். மல்லாவி மத்தியகல்லூரியில் இடம்பெயர்வினால் அதிகமாணவர்கள் கூடியிருந்தபோதும், அதற்கு இணையாக உயர்தர பாடங்களை போதிக்கும் ஆசிரியர்களுக்கு தட்டுபாடே நிலவியது. அந்தவேளையில் திரு கிருபா ஆசிரியர் தன்னாலான முழு முயற்சியையும் கற்பித்தலில் காண்பித்திருந்தார்.கணித மற்றும் வர்த்தக பாடங்களில் எத்தனையோ பேருக்கு ஆர்வத்தை தூண்டி, இன்று அவர்களை ஒரு நற்பிரஜையாக கல்விமான்களாக ஆக்கிய சிறந்த சிற்பியாகவே அவரை நான் பார்க்கிறேன். இன்று மணிவிழா காணும் திரு கிருபா ஆசிரியருக்கு எமது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவிப்பதுடன், அவரது இளைப்பாறுதலின் பின்னான காலம் வெகு சிறப்பாக அமையவேண்டும் என கடவுளை வேண்டி நிற்கின்றேன்.

## எமது அதிபர் சிவசாமி கிருபாகரன் அவர்கள்



**இ.சிறிகரன்**
**பாடசாலை அபிவிருத்திக்நிறைவேற்றுக்குழச் செயலாளர்**

எமது பாடசாலையில் மாணவனாய், ஆசிரியராய், அதிபராய் உங்கள் தடத்தை ஆழமாகப் பதித்தவரே! மாணவர்களின் ஆளுமையை கல்வியில் மட்டுமல்லாமல் பல மன்றங்களை பாடசாலையில் ஆரம்பித்து அதன் மூலம் வளர்த்தவரே! பலநூறு மரங்களை பாடசாலையில் நட்டு அதன்மூலம் நல்லதொரு சூழல் நேயத்தை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வளங்கியவரே! எமது பாடசாலையின் புகழை பல திக்கிலும் பரவச் செய்தவரே! பாடசாலைக்கு என்று பல அன்பளிப்புகளையும் உதவிகளையும் எமது சமூகங்களிடமிருந்து பெற்று கொடுத்தவரே! பாடசாலை சமூகத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதற்கு மாற்றுவழியில் உடனடியாக சுமூகமான தீர்வை எடுப்பவரே! எங்கள் பாடசாலையில் உங்கள் சேவைக்காலம் முடிந்து ஓய்வு பெறும் இந்நாளிலே உங்கள் சேவையை பாராட்டி உளங்கனிந்து வாழ்த்துகிறேன். உங்கள் ஓய்வுக்காலம் உங்கள் விருப்பப்படியே சிறக்க எங்கள் சிவகாமி சமேத நடராஜப் பெருமான் அருள்புரிவாராக.

## வாழ்த்துச் செய்தி



**விஜிதாஸ் (மாணவன்)**

வணக்கம் கிருபா சேர். இன்று உங்களின் பணி நிறைவெட்டி வாழ்து செய்தி தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நாங்கள் வன்னி பிராந்தியத்தல். போர்க்கால சூழலில் மல்லாவி மத்திய கல்லூரியில் படிக்கிற காலத்தில் எங்களுக்கு A/L கணிதம் பாடம் படிப்பித்து, நாங்கள் பல்கலைக்கழகம் செல்ல வழிவகுத்து ஆசான்களில் நீங்களும் மிக முக்கியமானவர். உங்களின் கற்பித்தல் முறை எங்களுக்கு மிக இலகவானதாகவும், விரிவானதாகவும், மிகவும் நட்புணர்வும் இருந்தது. உங்களின் சேவை பாடசாலையல் மட்டுமில்லாது, பின்னேரங்களிலும், வார இறுதியிலும் உங்கள் வீட்டில் வைத்து படிப்பத்தீர்கள் சில மாணவர்களின் பொருளாதார சிக்கலை கருதி, பாடங்களை இலவசாமாக கூட வழுங்கினீர்கள் அதில் நானும் இருந்து பயன் பெற்றனான் மிக்க நன்றி சேர். படிப்பு மட்டுமில்லாம் ஆளுமை நிர்வாகம், பேசும் திறமை, நாடகம், கலை என்ற பல்வழிகளிலும் எங்கள் வழுத்தெடுத்தனர்கள். உங்களை ஓய்வுகாலம் மிகவும் தரமாகவும், சிறப்பாகவும் உங்களை உறவினர்களுடன, நண்பர்களுடனும் மற்றும் குடும்பத்தார்களுடன் கழிக்க வாழ்த்துகின்றோம்.

## வாழ்த்துவோர்-கல்வி ஆர்வலர்கள்

**சிறப்பிதழ் அனுசரணை : சிவராசா கண்ணதாசன் (லண்டன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீடு

## ஆபஸ்தம்பம் கூறும் திருமணச்சடங்குகள்

திகதி : 11.06.2023 ஞாயிற்றுக்கிழமை

இடம் : சிவன் பார்வதி திருமண மண்டபம் (செருத்தனைப்பதி ஸ்ரீ இராஜ மகாமாரி அம்மன் திருக்கோவில்) புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

நேரம் : பி.ப. 01.30

**நிகழ்ச்சிநிரல்**

- மங்கல விளக்கேற்றல்
- வேத பாராயணம்
- திருமுறை வணக்கம்
- வரவேற்புரை

**தலைவர்:**
**சிவஸ்ரீ. Dr. மஹேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதக்குருக்கள் P.hd**
*(தலைவர் சமஸ்கிருதத்துறை இந்து கற்கைகள் பீடம் யாழ் பல்கலைக்கழகம்)*

**ஆசியுரை:**
**ஆகம பிரவீணர் சிவஸ்ரீ கு. குகேஸ்வரக்குருக்கள்**

**ஆய்வுரை:**
**தேசமான்ய சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்**
*(தலைவர், சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம்)*

**சிறப்புரை:**
**சிவஸ்ரீ. Dr.சாம்பசிவ ஐயப்பதாச சிவாச்சார்யார்**
(சர்வதேச இந்துமதகுருபீடம் - கொழும்பு)

மற்றும் சிவாச்சார்யார்கள்- வெளியீட்டுரை
ஏற்புரையும் நன்றியுரையும் - நூலாசிரியர்

**அனைவரையும் அன்போடு வரவேற்கும்!**

**சிவஸ்ரீ.Dr.பா.இந்திரக்குருக்கள் P.hd**
**ஸ்ரீவித்யா குடும்பம்**
**சிட்னி. அவுஸ்திரேலியா.**

# கேள்வி அறிவித்தல்-விலை கோரல்

## வலி. கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி

**பதிவு இல.யா/1556/10.03.1971**
T.P:-0213215262, Fax:-0212058112
Email:-mpcsatchuvely10031971@gmail.com (Sri Lanka)


1. பருத்தித்துறை வீதி ஆவரங்காலில் அமைககவுள்ள (IOC) எரிபொருள் நிலையத்திற்கான கீழ் காணும் வேலைகளுக்கு ஆர்வமுள்ளவர்கள் கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
2. கேள்விதாரர்கள் கேள்வி விலை கோரல் ஆனது இரண்டு வேலைத் திட்டங்கள் மொத்த கேள்வி அடிப்படையிலும் தனி கூலி கேள்வி விலை அடிப்டையிலும் ஆங்கில மொழியில் உள்ள நான்கு விண்ணப்பங்களை சங்க தலைமைக் காரியாலயத்தில் பெற்று வைப்புத் தொகைகளை செலுத்தி கடமை நாட்களில் காலை 9.00am தொடக்கம் மாலை 5.00pm இடையில் நேரடியாக வருகை தந்து இடத்தினை பார்வையிட்டு பூரணப்படுத்திய விண்ணப்பங்களை தலைவர், வலிகிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் அச்சுவேலி, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் எனும் முகவரிக்கு 01.07.2023 ம் திகதி முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
3. கேள்வியானது சங்கத்தின் இயக்குனர் சபையில் திறக்கப்படும். கேள்விக் கூறுவிலையானது மொத்த பெறுமதி அடிப்படையிலோ அல்லது கூலி கேள்வி விலை அடிப்படையிலோ இயக்குனர் சபையால் ஆராயப்பட்டு பொருத்தமான கேள்வி கூறுவிலை வழங்குவதற்கு தீர்மானிக்கப்படும்.
4. கேள்விப்பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | வேண்டப்படும் கேள்வி வைப்பு | |
|---|---|---|---|
| | | மீளளிக்க கூடிய தொகை | மீளளிக்க முடியாத தொகை |
| NP/J/1556/Atch.MPCS/1/06/2023 | சுற்று மதில் வேலை | 40000.00 | 3000.00 |
| NP/J/1556/Atch.MPCS/2.06.2023 | தள வேலை | 20000.00 | 3000.00 |

❖ சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ பகுதியாகவோ நிராகரிக்கவோ. மீள் கேள்வி கோரவோ இயக்குனர் சபைக்கு அதிகாரமுண்டு.

தலைவர்,
வலிகிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் அச்சுவேலி.
பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்.
(0212058112/0213215262)
10.06.2023

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் சிவசுப்ரமணியம்

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிவசுப்ரமணியம் நேற்று (09.06.2023) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாவதி அவர்களின் பாசமிகு கணவரும், அமரர் பரமேஸ்வரி, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் சோதிமலர், விமல நாதன் (பிரான்ஸ்), சுரேஸ் (பிரான்ஸ்), அமரர் ரமேஸ், ஜீவமலர் (பிரான்ஸ்), கோணேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராசாத்தி, கலாவதி, தயாளன், ரேனுகா ஆகியோரின் அன்பு மாமனாரும், லிதுர்சன், நிறுயன், லக்சிகா, தேனுஜன், வர்னிகா, துவிஸ்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 175 2611, 076 9651 996**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25193) A-1

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**26 . 06 . 1939**



**மறைவு**
**09 . 06 . 2023**

## லயன் Dr.பொன்னம்பலம் சண்முகரத்தினம் (JP)

யாழ். மறவன்புலோவை பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.பொன்னம்பலம் சண்முகரத்தினம் அவர்கள் நேற்று (09.06.2023) வெள்ளிக் கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் கமலாம்பிகை தம்பதியரின் ஏகபுதல்வனும், மற்றும் காலஞ்சென்ற தங்கலட்சுமியின் பெறாமகனும், காலஞ் சென்றவர்களான ஆறுமுகம் திருப்பதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் பாசமிகு கணவரும், நளினி (நோர்வே), ஜெய மாலினி, ஜெயந்தினி (நோர்வே), Dr.பரமானந்தம் (அவுஸ்தி ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணானந்தன் (நோர்வே), சத்தியேந்திரன் (நியூபாமா ஹாட்வெயார்- யாழ்ப்பாணம்), பகீரதன் (நோர்வே), Dr.அட்சரேஸ்வரி (அவுஸ்தி ரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அட்சயன் (நோர்வே), அபிசரன் (நோர்வே), அபிராமி (நோர்வே), நிசான், ஆகார்சன் (அவுஸ்திரேலியா), அபிசயன் (அவுஸ்திரேலியா), அக்ஷயா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும், சண்முகதேவர், சண்முகானந்தன், இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சண்முகலிங்கம் ஆகியோரின் மூத்த சகோதரனும், காலஞ்சென்றவர்களான சூரியகுமாரன், சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.06.2023 திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் கைதடி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**பொது நூலக வீதி, கைதடி தெற்கு.**
**தொ.பே:077 7043 645.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25191) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபாகரன் அவர்களின்
# நாள் சிறப்பிதழ்




## ாமி கிருபாகரன்

ஆத்திசூடி வித்தியாலயம் - சோளவத்தை
ண மத்திய கல்லூரி
பாணம் பல்கலைக்கழகம் PGDE. M.Ed
4

ா வித்தியாலயம் - 1989.04.24 - 1992.01.19
- 1992.01.20 - 1993.12.31
ம - 1994.01.01 - 1995.08.31
ரி - 1995.09.01 - 1996.05.14
- 1996.05.15 - 1999.02.10
- 1999.02.11 - 2003.03.09
ளரி - 2003.03.10 - 2008.01.01

- வலிகாமம் (கணிதம்) - 2008 .01.02 -2009.05.26

.05.27 - 20011.05.31 (SLPS -2)
1.06.01 - 2023.06.09 (SLPS -1)

ogram for Secondary Level Teachers -
Educational Administrators, Seoul National

ogram For Secondary Lcvel teachers - National
ducation Development. Ministry of Education
opment Repulic of Korea
ssment Based Implementation - Asian Institute

### ாழ்த்துச் செய்தி

...தரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். மிக நீண்டகாலம் கல்வித்துறையில் அரம்பணியாள்றி ... முதலில் கிடைத்தது மல்லாவிமத்திய கல்லூரியில்தான் 1995 ற்கப் பின்னர் மிகப் பெருமளவான ...ரவணைத்துக்கொண்டது. அப்போதுள்ள நிலைமையை சாதகமாக்கி முன்னகர்த்துவதில் பல்வெறு ... வளங்களை கச்சிதமாகப் பிரித்து ஒருக்கி கல்விச் செயற்பாடுகளை முன்னகர்த்திய போதும் ...ரவுகள் என்ற கலைவிழாவில் . பெருமளவான மாணவர்களை இணைத்து ஓர் நாடகத்தை ... வெற்றிகரமாக நடந்த அவ்விழா பாடசாலை நிதி வளத்தையும் பலமடங்கு பெருக்கியது. கணித, ...னய துறை மாணவர்களையும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் இணைத்துச் செயலாற்றி ...ப்பாட பிதான செயற்பாட்டில் இடுபடும்வண்ணம் வழிப்படுத்தப்பட்டார்கள் இதன் மூலம் மாணவர் ...பதிலும் கிருபா ஆசிரியரும் ஏனையோரும் வெற்றிகண் ர்கள். இவரின் இப்பணி ஓய்வுகாலத்தின்

### அருட்சகோதரி தெரேஸ்ராணியின் வாழ்த்துச் செய்தி



**அருட்சகோதரி தெரேஸ்ராணி, அ. கா.**
**முன்னாள் அதிபர்,**
**புனித மரியாள் கல்லூரி (தேசிய பாடசாலை) திருக்கோணமலை.**

60ஆவது அகவையில் காலடி வைத்து தனது ஆசிரியர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிகளை வகித்து அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெறும் திரு. சிவசாமி கிருபாகரன் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்து செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்வடைகின்றேன். 2023.06.10 அன்று நடைபெறும் பிறந்த தின கொண்டாட்ட நிகழ்வுகளுக்கு சமூகமளிக்க முடியாவிடினும் அவருக்கு மகிழ்வுடன் எனது வாழ்த்துச் செய்தியை அனுப்புகின்றேன். திரு.சிவசாமி கிருபாகரன் அவர்கள் 1999 – 2003 ஆண்டுகளில் திருக்கோணமலை புனித மரியாள் கல்லூரியில் (தேசிய பாடசாலையில்) தரம் 6-13 வரையுள்ள மாணவர்களுக்கு கணித ஆசிரியராகக் கடமையாற்றினார். அவர் கடமையாற்றிய காலப்பகுதியில் எமது பாடசாலையில் கல்விப் பொதுத்தராதர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளை கணித பாடத்தில் பெறுவதற்கு இவரும் காரணமாக இருந்தார் என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். போர் விளைவின் காரணமாக வடமாகாணத்திலிருந்து கிழக்கு மாகாணத்திற்கு வந்த ஆசிரியர்கள் பலர் அரும் பெரும் கல்விப்பணிகளை கிழக்கு மாகாணத்திற்கு அளித்தனர். அவ்வாறு குறிப்பிடும் போது திரு.கிருபாகரன் திருக்கோணமலை புனித மரியாள் கல்லூரியில் கணித பாடம் கற்பித்ததுடன் அதற்கும் அப்பாற் சென்று ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடு களுக்கும் தனது ஆற்றல்களையும், நேரத்தையும் அர்ப்பணித்து தனது பங்களிப்பைச் செய்துள்ளார்.அத்துடன் 1999 இல் "சூழலைப் பாதுகாத்தல்" எனும் தலைப்பில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு நடைபெற்ற நாடகப்போட்டியில் "நஞ்சாகும் அமுது" என்னும் நாடகமொன்றை பயிற்றுவித்து கோட்டம், மாவட்டம், மாகாண மட்டம் வரையும் சென்று முதலாம் இடத்தை பெற்று தந்த பெருமை இவரையே சாரும். அது மட்டுமன்றி வினாவிடைப் போட்டிகளிலும் மாணவர்கள் சிறப்பாக இயங்க இவர் பேருதவி புரிந்தவர். மேல் வகுப்பிற்குரிய கணித பாடத்தில் மாணவர் சஞ்சிகையை உருவாக்கவும் காரணமாயிருந்தவர். அது மட்டுமன்றி பாடசாலை மட்டம், கோட்ட மட்டங்களில் நடைபெற்ற கண்காட்சிகளிலும் மாணவர்களுக்கு துணைபுரிந்தார். ஆசிரியர் தின விழாக்களை சிறப்பிக்கவும் "செடெக்" தாபனத்தினால் நடத்திய நாடகப் போட்டிகளிலும் மாணவர்களுக்கு பயிற்சியளித்து வழிகாட்டியுமிருந்தவர். இவ்விதம் அவருடைய காலம் பாடவிதான செயற்பாடுகளிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பாடசாலையின் சிறப்பான வளர்ச்சிக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கினார். அதையிட்டு நான் அவருக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து எனது நன்றியை தெரிவிக் கின்றேன். அவரின் தாராள மனப்பாங்கை இறைவன் தொடர்ந்தும் ஆசீர்வதிக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அவர் ஓய்வு பெறும் இந்நாளிலே அவரை மகிழ்ந்து வாழ்த்துவதோடு இன்னும் பல்லாண்டு காலம் அவருடைய கல்விச் சேவை எமது சமூகத்திற்கு கிடைக்க வேண்டுமென்றும், அவர் தொடர்ந்தும் உடல் நலத்தோடு குடும்பத்தில் மகிழ்ச்சியாக வாழவும் அவருடைய சேவையின் பலனை எமது சமூகம் அனுபவிக்கவும் நான் வாழ்த்தி நிற்கின்றேன்.

இறைவன் என்றும் அவரை வளமுடன் வாழ துணைபுரிவாராக.

### வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் ஆசிச்செய்தி



**திரு. அ.உமாமகேஸ்வரன்**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.**
**வடமாகாணம்.**

சப்த தீவுகளில் ஒன்றான ஊர்காவற்றுறையில் உள்ள வேலணைப் பிரதேசத்தில் இலவசக் கல்வியின் தந்தையான ஊ.று.று.கன்னங்கராவினால் ஆரம்பிக்கப்பட்ட 54 மத்திய வித்தியாலயங்களில் ஒன்றான யா/வேலணை மத்திய கல்லூரியில் அதிபராக கடமையாற்றி 09.06.2023 முதல் ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.சிவசாமி கிருபாகரன் அவர்களின் சேவையினை பாராட்டி பத்திரிகையில் வெளியிடப்படவுள்ள மணிவிழா வாழ்த்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.09.06.1963 இல் பிறந்து தனது ஆரம்ப, இடைநிலைக் கல்விகளினை சிறப்புறக் கற்றுத் தேர்ந்திருந்தார்.

தான் கற்ற கல்வியினை ஏனையவர்களும் பெற்றுக்கொள்ளும் பயனாக 24.04.1989 இல் யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தில் தனது கடமையினை பொறுப்பேற்று 19.01.1992 வரை சிறப்பாக கடமையாற்றியிருந்தார். தொடர்ந்து பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 20.011992 – 31.12.1993 வரை பயிற்சி பெற்று பின் யா/தம்பாட்டி அ.த.க பாடசாலை, யா/வேலணை மத்திய கல்லூரி, முல்/மல்லாவி மத்திய கல்லூரி, யா/புனித மரியாள் கல்லூரி போன்றவற்றில் கடமையாற்றியதுடன் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற தேசிய பாடசாலைகளில் ஒன்றான யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் ஆசிரியராக தனது பணிகளினை சிறப்பாக ஆற்றியிருந்தார். ஆசிரியர பணியுடன் நின்றுவிடாது 02.01.2008 26.05.2009 வரையான காலப்பகுதியில் வலிகாமம் கல்வி வலயத்தின் கீழ் கணித பாட ஆசிரியர் ஆலோசகராக தனது கடமைகளினை சிறப்புற ஆற்றியிருந்தார்.

இவரது கல்வி அறிவு மற்றும் தலைமைத்துவ ஈடுபாடு என்பவற்றின் LOGOLDITES 27.05.2009 31.05.2011 வரையான காலப்பகுதியிலே வலிகாமம் கல்வி வலயத்தின் கீழுள்ள பிரபல பாடசாலைகளில் ஒன்றான யா/இணுவில் மத்திய கல்லூரியில் அதிபராக தனது கடமைகளினை பொறுப்பேற்றிருந்தார். தொடர்ந்து தான் ஆசிரியராக கடமையாற்றிய வேல்லணைப் பிரதேசத்தின் யா/வேலணை மத்திய கல்லூரியிலே 01.06.2011 முதல் ஓய்வு பெறும் வரை அதிபர் சேவையினை திறம்பட ஆற்றி இன்று ஓய்வுபெற்றுச் செல்கின்றார்.

கல்வியறிவும் சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத்தன்மையுமே மனிதனை உயர்த்தும் ஒரு வழி எனக் குறிப்பிடப்படுகின்றது. தனி மனிதர் வாழ்வை இன்பமுடையதாகவும் நன்மையுடையதாகவும் மாற்றி அமைப்பதும் வாழ்வாங்கு வாழ் வழி வகுப்பதுமே கல்வி. இத்தகைய கல்வியினை தனது மாணவர்களிற்கு போதித்து தனது சேவையில் தன்னிறைவு கண்டுள்ளார்.

என்பதில் எவ்வித ஐயமுமில்லை இவரது அளப்பரிய சேவையினை பாராட்டுவதுடன், தனது ஓய்வுகாலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்தித்து மனதார வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கெள்கின்றேன்.

### மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



**திரு. தி. ஜோண் குயின்ரஸ்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்**

கல்விப் புலத்தில் முப்பத்தைந்து வருடங்களை அண்மித்த சேவையினைக் கொண்டவரும் அதிபர்களுள் ஒருவருமான திரு. சிவசாமி கிருபாகரன் அவர்களின் பணியினை நயந்து வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். திரு. சிவசாமி கிருபாகரன் அவர்கள் 1989 ஆம் ஆண்டு ஆசிரியராக நியமனம் பெற்றுக்கொண்டதிலிருந்து இன்று வரை எமது சமூகத்துக்காக அளப்பரிய கல்விச்சேவையினை ஆற்றியுள்ளமை பாராட்டுக்குரியது. இவர் சிறந்த ஆசிரியராகவும், அதிபராகவும் திகழ்ந்தார். சமகாலத்தில் என்னுடன் பலாலி ஆசிரியர் கலாசாலையில் கல்வி கற்றவர். இவர் 2009 ஆம் ஆண்டு அதிபராக கடமையேற்று தனது தலைமைத்துவ ஆற்றலினால் தான் பொறுப்பேற்றுக்கொண்ட யா/ இணுவில் மத்திய கல்லூரி மற்றும் யா/ வேலணை மத்திய கல்லூரி என்பவற்றில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்தார்.யா/ வேலணை மத்திய கல்லூரியில் 12 வருட அதிபர் சேவைக்காலத்தில் அதிகளவான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பிய பெருமைக்குரியவர். விளையாட்டிலும் பாடசாலையானது முதன்மை நிலையை அடைய வழிகாட்டியவர். இவர் காலத்தின் சிறப்பான பணிகளாக மாணவர் விடுதி புனரமைக்கப்பட்டதுடன் உயர்தர விஞ்ஞான ஆய்வுகூடம், தொழில்நுட்ப ஆய்வுகூடம், அதிபர் விடுதி என்பன அமைக்கப்பட்டு மைதான விஸ்தீரணப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.இவ்வாறாக கல்வியுடன் விளையாட்டிலும் தம்மை அர்ப்பணித்து எமது மாணவச் செல்வங்களின் நல்வாழ்வுக்காக உயர்வான சேவையாற்றிய இவரின் பணியைப் பாராட்டுகிறேன். வேலணை மத்திய கல்லூரியில் இவர் நாட்டிய நூற்றுக்கு மேற்பட்ட பயன்தரு மரங்கள் இவர் பெருமையை என்றும் சூழலியலில் எடுத்தியம்பி நிற்கும். இவரது ஓய்வு காலம் சிறக்க நல்வாழ்த்துக்கள்

### அறுபதையுங் கடந்து......

**செ.சிறியாஸ்பரன்**
**தலைவர்,**
**வே.மத்திய கல்லூரி, ப.மா.சங்கம், பிரான்ஸ்**

எமது கல்லூரியில் பதின்மூன்றாண்டுகள் ஆற்றிய அதிபர் சேவையில் இருந்து அறுபதாவது அகவையில் இளைப்பாறும் அதிபர் சி. கிருபாகரன் அவர்களுகட்கு எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் நன்றியுடன் உரித்தாகட்டும். கல்லூரியின் அபிவிருத்தியிலும் கல்வி வளர்ச்சியிலும் தங்கள் சேவைக்காலம் பெரும்பங்காற்றியிருக்கின்றது. பெரும்வேலைத்திட்டங்களை செவ்வனே நிறைவேற்றியமை வரலாற்றின் சாட்சியாகிவிட்டதும் தங்கள் சேவைக்காலம் தான். கல்லூரியின் அகபுற வளங்களை சீர்திருத்தி பயனுள்ளனவாக மாற்றியமை வரலாற்றின் பதிவுகள். கடமை நேரத்தையும் கடந்து கல்லூரிப்பணிகளல் ஈடுபாட்டுடன் உழைத்த பெருமனத்தன். மண்ணின் மைந்தனாக, மாணவர் தோழனாக உரிமையுடன் உறவாகி நின்று பல சாவல்களை சளைக்காது எதிர்கொண்டு ஆற்றிய பணிகள் நினைவில் நீங்காதவை. [illegible] உழைப்பு கல்லூரிச் சமூகத்திற்கு பயனுறவேண்டியும் வாழ்த்துகிறோம். நல்லாரோக்கியத்துடனும் நீடித்த ஆயுளுடனும் வாழ்வாங்கு வாழ்கவென வாழ்த்துகிறோம்.

தொடர்ச்சி பக்கம் 8-9 ......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலையடி மறுமலர்ச்சி மன்ற உள்ளரங்கில் இடம்பெற்ற மன்ற முன் பள்ளி மழலையரின் கலை விழாவின் காட்சிகள். (ய)




‘ஏழாலை’ எனும் கிராமம் உருவாகக் காரணமான ஏழு ஆல யங்களில் ஒன்றான, ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலய மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா வைகாசி விசாக நன்னாளான கடந்த வெள்ளிக்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக நடைபெற்றது. (ம-66)




மன்னார், பேசாலை கிராமத்தில் இயங்கிவரும் சென்.மேரிஸ் சிறுவர் முன்பள்ளி பாடசாலைச் சிறார்களின் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஒருநாள் சந்தை பேசாலை 4ஆம் வட்டாரத்தின் முற்றவெளியில் கடந்த 24ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. (ய-60)





யாழ். இந்திய உதவித்தூதரகத்தின் ஏற்பாட்டில் “சர்வதேச யோகா தினத்தை நோக்கிச் செல்லும்போது” என்னும் கருப்பொருளில் சர்வதேச யோகாதினப் பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாணம் கலாசார மையத்தில் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். இந்திய உதவித்தூதரக பதில் தூதுவர் ராம்மகேஷ் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிறு மற்றும் புதன் வரை இலவச யோகா வகுப்புகளில் இணையுங்கள். ஆரோக்கியத்தைத் தழுவி எங்களுடன் யோகாதினத்தைக் கொண்டாடுங்கள் என யாழ். இந்திய உதவித்தூதரகம் அறிவித்துள்ளது. (ய-27)



மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி முல்லைத்தீவு - விசுவமடு தொட்டியடிப் பகுதி சவாரித் திடலில் கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து சுமார் 70க்கும் மேற்பட்ட காளை ஜோடிகள் போட்டியில் பங்குபற்றின. (ய-113)



கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் 52 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு ஜெறலலைனஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர்கள் பரராஜசிங்கம் மகேஸ்வரி மற்றும் பரராஜசிங்கம் வசந்தகுமார் ஞாபகார்த்த துடுப்பாட்ட சுற்றுப்போட்டி நிலைய மைதானத்தில் கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய-20)




யாழ்.கோப்பாய் பிரதேச தேசோதய சபையின் ஏற்பாட்டில் புலம் பெயர்ந்து கொலண்ட் நாட்டில் வசிக்கும் மு.லலிதாவின் நிதிப் பங்களிப்பில் புத்தூர் கிழக்கு ஸ்ரீ விக்னேஸ்வரா முன்பள்ளி மாணவர்களுக்கு சீருடைகள் மற்றும் சத்துணவுப் பொதிகள் உட்படப் உடுபுடைவைகளும் கடந்த மாதம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. (ய-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60ஆவது அகவையை கொண்டாடும் எமது மண்ணின் மைந்தன்

## திரு.சிவசாமி கிருபாகரன்



கல்லூரியில் நீங்கள் கால் பதித்ததால்
ஆயிரம் விருட்சங்கள் வேர் பதிந்தது
முன் எழில் கொஞ்ச கவிநிலை விஞ்ச
கற்றலும் கலையும் மேவியது காண்.





கன்னங்கராவின் பெருஞ்சமர் ஆடிட
முகிழ்தெழுந்தனர் எம் இளம் சிறார்கள்
கல்லூரி வளாகமானதால் கருணை
ஒளிக்கீற்று எங்கும் மிளிர்ந்தது காண்.




Best Wishes



வாழ்த்துவோர்: ஆத்திசூடி ஒன்றியம்


## விற்பனைக்கு

4 செற் . 2 செற் ஆர்மோனியம் . வயலின் விற்பனைக்கு உண்டு.

077 360 8826

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிக நிலையத்திற்கு Computer Billing ற்கும், பில் கட்டி கொடுப்பதற்கும் ஆண் வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் நேரில் சுயவிபரக்கோவை யுடன் சமுகம் தரவும்.

விநாயகர் ஸ்ரோர்ஸ்
424, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
077 419 5015

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் (V). 1984. அத்த நட்சத்திரம், நிரந்தர வருமானம் பெறும் மணமகனுக்கு உள்நாடு அல்லது வெளிநாட்டில் மணமகள் தேவை. யாழ் நகரில் மணமகனுக்குச் சொந்தமான வீடும் உண்டு.

(CS/50740)AH-1

071 330 1133

## ஆடு விற்பனைக்கு

ஜமுனா பாரி நல்ல இன குட்டித்தாச்சி ஆடுகள் 3 உடன் விற்பனைக்கு உண்டு.

(CS/50765)AH-1

076 037 4643

## வேலையாள்கள் தேவை

ஊர்காவற்றுறையில் நடைபெறும் கட்டுமானப் பணிக்கு வேலையாள்கள் தேவை.

- மேசன் - 2500.00
- மேசன் உதவியாளர் - 2000.00
- பெயின்ரர் - 2000.00 - 2500.00 வரை

தங்குமிட வசதி தேவைப்படின் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு கொள்ளும் நேரம்:
காலை 8.00 மணி தொடக்கம்
மாலை 6.00 மணிவரை.

(CS/ 50761)AH-1

074 063 8216

## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் வெதுப்பகமொன்றுக்கு

- விற்பனை உதவியாளர் மற்றும் காசாளர் (இரண்டும் ஒரே நபர் கையாள வேண்டும்)
- பாண் உற்பத்தி வேலை செய்வதற்கும் ஊழியர்கள் தேவை.

நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்:
முற்பகல் 9.00 - நண்பகல் 12.00 வரை

(CS/50739)AH-1

077 713 1594, 021 222 9402

## பணியாளர் தேவை

SV முருகேசு அங்கர் விற்பனை முகவர் நிறுவனத்துக்கு கணக்காளர் மற்றும் கணினி இயக்குநர்கள் தேவைப்படுவதால் குறித்த வேலை தேவைப்படுவோர் (ஆண்/ பெண்) எமது அலுவலகத்துக்கு நேரில் வரவும். (ஞாயிறு தவிர்த்து)

முகாமையாளர்,
SV முருகேசு அங்கர் விற்பனை முகவர் நிறுவனம்,
இல.154, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
021 492 5825, 021 222 2991

(CS/50767)AH-1


## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13.10.1954 | 08.06.2023 |

### திரு. சிவஞானசுந்தரம் கணேசப்பிரகாஸ்

(இளைப்பாறிய இயந்திரவியல் பொறியியல் பீட கற்கை சிரேஷ்ட உதவி ஆசிரியர் - மொறட்டுவை பல்கலைக்கழகம்)

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பு.லோகரட்ணம் மதிவதனி
அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(CS/50766)AH-1


## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் ஆனது எதிர்வரும் (25.06.2023)ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்க பணிமனையில் நடைபெற இருப்பதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது வருகை தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(CS/50750)AH-1

இணைச்செயலாளர்

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10.08.1937 | 09.06.2023 |

### திருமதி ஞானேஸ்வரி சிதம்பரப்பிள்ளை

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி சிதம்பரப்பிள்ளை நேற்று (09.06.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரட்ணம் - சிவபாக்கியபூரணம் தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சபாநாயகம் - தெய்வேந்திரபிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சபாநாயகம் சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும், சி.உமையாள் (அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை திணைக்களம் - வடமாகாணம்), ஜெகதீஸ்வரன் ஆனந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெகதீஸ்வரனின் மாமியாரும், ஜெயக்காந்தன், ஜெயபிரியா, ஜெயதீபா, ஜெயபிரகாஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/50757)AH-1

தகவல்: குடும்பத்தினர்.


077 618 0884, 077 617 6551

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிரிக்க மறந்தனர் ஜப்பானியர்கள்!

டோக்கியோ, ஜுன் 10
உலக நாடுகளை ஆட்கொண்ட கொரோனாத் தொற்றுத் தாக்கத்தால் ஜப்பானியர்கள் சிரிக்கவே மறந்துவிட்டார்களாம்.
அவர்கள் கடைப்பிடித்த முகக்கவசம் அணியும் பழக்கம் அதன் ஒரு காரணம் என்று ஆராய்ச்சியில் கூறப்படுகிறது. ஜப்பானிய அரசு கொரோனாத் தொற்றுக் கட்டுப்பாடிலிருந்து முகக்கவசம் அணிவதற்கு கட்டாயம் இல்லை என்று அறிவித்தபோதும் இன்றும் பலர் முகக்கவசம் அணிந்துதான் வெளியே செல்கிறார்கள்.
அங்குள்ள 8 சதவீத மக்களே முகக்கவசம் அணிவதை நிறுத்தியுள்ளனர் என ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.
இந்தநிலையில் டோக்கியோவில் உள்ள கலை கல்வி நிறுவனமொன்று சிரிக்க மறந்த ஜப்பானிய மக்களுக்கு சிரிக்க கற்றுக் கொடுக்கும் வகுப்புகளை ஆரம்பித்துள்ளது.
சிரிப்பின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கும் இந்த வகுப்பில் ஜப்பானியர்கள் பலர் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றார்கள் எனக் கூறப்படுகிறது. (ச-இ)



# மனிதகுலத்துக்கு 'ஏ.ஐ.' ஆபத்தே!

## கூகிள் எச்சரிப்பு

வொஷிங்டன், ஜுன் 10
உலகம் முழுவதும் ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவின் (Artificial Intelligence) வளர்ச்சி மனித குலத்துக்கு அபாயமாக அமையும் என கூகிள் முன்னாள் சி.இ.ஓ. எரிக் ஷ்மிட் எச்சரித்துள்ளார்.
தற்போதைய தொழில்நுட்ப உலகில் ஏ.ஐ. இன் தொழில்நுட்பத் தாக்கம் அதிகரித்துள்ளது.
நாளுக்கு நாள் புதுப்புது ஏ.ஐ. தொழில்நுட்பங்கள் மக்களிடையே முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன.
கோப்புகள், ஆவணங்கள் எழுதுவது தொடங்கி, புகைப்படம் எடிட் செய்தல், காணொலி உருவாக்குதல் என அசுர வேகத்தில் வளர்ந்து வருகிறது.
இந்த ஏ.ஐ. தொழில்நுட்பம் எந்த அளவுக்கு வளர்ச்சிக்கு உதவுகிறதோ அதே அளவு ஆபத்தையும் உருவாக்கும்.
இந்தத் தொழில்நுட்பம் பயங்கரவாத அமைப்புகளால் கைக்கொள்ளப்படும் பட்சத்தில் இது மனித இனத்துக்கு பெரும் அழிவை ஏற்படுத்தும் ஒன்றாக மாறும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச-இ)

ஒடிசா ரயில் விபத்து

# மின்சாரம் தாக்கி 40 பேர் சாவு!

சென்னை, ஜுன் 10
இந்தியாவின் ஒடிசாவில் கடந்த 2 ஆம் திகதி இரவு மூன்று ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 300 பேர் வரையில் உயிரிழந்த நிலையில் அதில் 40 பேர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்தக் கோர விபத்தில் 17 பெட்டிகள் தடம்புரண்டன. இந்த நிலையில் சென்னை கோரமண்டல விரைவு ரயிலின் ஒரு பெட்டியில் மட்டும் 40 உடல்கள் மீட்கப்பட்டன.
அவர்களது உடலில் எந்தக் காயமும் இல்லை என்பதுடன் இரத்தமும் வெளியாகியிருக்கவில்லை. பிரேத பரிசோதனையில் அவர்கள் 40 பேரும் மின்சாரம் பாய்ந்ததில் உயிரிழந்திருப்பது தெரியவந்துள்ளது.
விபத்தின்போது ரயில்வே மின்கம்பங்கள் சாய்ந்து வீழ்ந்து மின்சாரம் தாக்கி 40 பேரும் உயிரிழந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. (ச-இ)



## பிரிட்டன் நீதிபதியாக இலங்கைப்பெண்

லண்டன், ஜுன் 10
இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட பெண்ணொருவர் இங்கிலாந்து நீதிமன்றத்தில் நீதிபதிப் பதவியைப் பெற்றுள்ளார்.
ஆயிஷா என்ற 34 வயதுப் பெண்ணே நீதிபதியாக பதவியேற்றுள்ளார்.
அதன்படி இங்கிலாந்தில் நீதிபதியாகப் பதவியேற்ற இளம் வெள்ளையர் அல்லாத பெண் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். அத்துடன் அவர் ஒரு சிறப்பு மருத்துவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# உக்ரைன் அணைக்கட்டு தகர்ப்பு; ஆயிரக்கணக்கானோர் தவிப்பு!

கீவ். ஜுன் 10
உக்ரைனின் பிரதான மிகப் பெரிய அணைக்கட்டு ஒன்றை ரஷ்யா குண்டுவீசி தகர்த்துள்ளது என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அணையிலிருந்து அதிக அளவில் தண்ணீர் வெளியேறுவதால் உக்ரைனிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் அந்தரித்து வருகின்றனர்.
உக்ரைனின் கெர்சன் பகுதியில் டினிப்ரோ ஆற்றின் குறுக்கே, கடந்த 1956ஆம் ஆண்டு 98 அடி உயரத்தில் 3.2 கி.மீ நீளத்தில் கக்கோவ்கா அணை கட்டப்பட்டது.
கிரிமியன் தீபகற்ப பகுதி, ஜபோரிச்ஜியா அணுமின் நிலையம் ஆகியவற்றுக்கு இந்த அணையிலிருந்துதான் தண்ணீர் விநியோகம் நடைபெறுகிறது.
சோவியத் காலத்தில் கட்டப்பட்ட இந்த அணையை ரஷ்ய இராணுவம் தகர்த்துவிட்டதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், இந்தத் தாக்குதலை உக்ரைனே நடத்தியுள்ளது என ரஷ்யா தெரிவித்துள்ளது.
இந்த அணைக்கட்டு உடைவால் சுமார் 18 மில்லியன் கனமீற்றர் நீர் வெளியேறி வருகிறது.
அணையிலிருந்து வெளியேறிய தண்ணீர் நகரங்கள், கிராமங்கள் பலவற்றுள் புகுந்துள்ளதால் ஆயிரக்கணக்கான குடியிருப்புகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சாலைகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. வெள்ளப் பாதிப்பு இன்னும் அதிகரிக்கும் என்றும் அஞ்சப்படுகிறது.
கெர்சன், கக்கோவ்கா பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு உக்ரைன் அரசு அறிவுறுத்தியுள்ளது.
உக்ரைனின் அணை தகர்ப்பு ஆயிரக்கணக்கான மக்களை மோசமான விளைவுகளை நோக்கி தள்ளி இருக்கிறது என்று ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் வெளியிட்டுள்ளது. (ச-இ)

# ஆஸி. நீதிமன்றில் நீதி பிழைத்த தீர்ப்பு

## 20 வருடங்களின் பின் குற்றவாளிக்கு மன்னிப்பு

சிட்னி, ஜுன் 10
55 வயதான பெண்மணி ஒருவரின் வழக்கு அவுஸ்திரேலியாவின் நீதி பிழைத்த மிகப்பெரும் சம்பவம் என வர்ணிக்கப்படுகிறது.
கத்திலீன் பொல்பீளிக் என்ற குறித்த பெண் தனது 4 பிள்ளைகளைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவருக்கு 2003 ஆம் ஆண்டு அப்போதைய நீதிபதியொருவர் 20 வருட சிறைத்தண்டனை விதித்திருந்தார்.
எனினும் புதிய விசாரணைகளின்போது அவரது பிள்ளைகள் இயற்கையாகவே மரணத்தை தழுவியுள்ளனர் என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். மரபணுமாற்றங்கள் குறித்த ஆராய்ச்சிகள் அவரின் குழந்தைகளின்



உயிரிழப்பில் புரிதலை மாற்றிவிட்டதாக சட்டத்தரணிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
அந்தப் பெண்மணி தனது நான்கு பிள்ளைகளையும் கொலை செய்யவில்லை என்பது புதிய ஆதாரங்களினூடாக நிரூபணமாகியுள்ளது.
இந்தநிலையில் 20 வருடங்கள் சிறைத்தண்டனையை அனுபவித்த பின்னர் பொது மன்னிப்பின் கீழ் அவர் கடந்த திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றுக

## சரத் வீரசேகர வலியுறுத்து

இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்ற கனடாவின் அறிவிப்பை, ஏனைய நாடுகளும் அங்கீகரிக்கலாம் என்று எச்சரித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரும் பாதுகாப்புத் தொடர்பான நாடாளுமன்ற கண்காணிப்பு குழுவின் தலைவருமான சரத் வீரசேகர, கனடாவின் அரசியல்நோக்கம் கொண்ட பொய்யை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அமைச்சரவையின் அனுமதியைப் பெற்ற பின்னர் இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற கனடாவின் தீர்மானத்தைக் கண்டிப்பதற்காக வெளிவிவகார அமைச்சு நாடாளுமன்றத்தில் தீர்மானமொன்றைக் கொண்டுவரவேண்டும். இது தொடர்பில் நானும் தனிநபர் பிரேரணையொன்றைக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளேன்.

கனேடிய அரசாங்கம், தன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே கோத்தாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக பயணத்தடைகளை விதித்தது. ஆதாரங்கள் அற்ற வகையில் கனடா விதித்துள்ள பயணத்தடைக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் போரில் வெற்றிபெற்ற இராணுவத்தினருக்கு கடும் பாதிப்புகள் ஏற்படலாம் - என்றார். (அ-ம)

### மல்லாவியில்...

தாக்கி உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மல்லாவி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-113)

### வெள்ளி,...

பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக, தனியார் கல்விச் செயற்பாடுகள் ஏழு நாள்களும் முன்னெடுக்கின்ற காரணத்தால் மாணவர்கள் அதீத அழுத்தத்துக்கு ஆளாகின்றனர் என்றும் அவர்கள் சமயக்கல்வி மற்றும் ஒழுக்கக்கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவது குறைவாகக் காணப்படுகின்றது என்றும் நீண்டகாலமாகவே குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமைகளில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்குத் தடைபோடும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் அண்மையில் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு பின்னணியில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில மாவட்டச் செயலாளர் அ.சிவபாலசுந்தரனின் தலைமையில் நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் 1 மணிவரை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில், சுகாதாரத் துறை அதிகாரிகள், கல்வியியலாளர்கள், மதத் தலைவர்கள், பொலிஸார், தனியார் கல்வி நிலைய நிறுவனங்கள், பெற்றோர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். இதன்போதே, தரம் ஒன்பதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மேலதிக வகுப்புக்கள் நடத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில்,

1. மாணவர்களுக்கு சமயக்கல்வியும், ஒழுக்கக்கல்வியும் ஏற்படுத்தப்படவேண்டியதன் அவசியம் தொடர்பில் பெற்றோருக்கு முதலில் விழிப்புணர்வூட்ட வேண்டும்.
2. ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் தரம் 9க்கு உட்பட்ட மாணவர்களுக்கான பிரத்தியேகக் கல்வி நடவடிக்கைகள், ஞாயிற்றுக்கிழமையும் வெள்ளிக்கிழமை மாலையும் முற்றுமுழுதாக நிறுத்தப்பட வேண்டும்.
3. தனியார் கல்வி நிலையங்கள் சுகாதார வசதி, வகுப்பறைப் பிரமாணம் கட்டடங்கள் போன்றவற்றுக்கமைய அமைந்திருக்கவேண்டும்.
4. தனியார் கல்வி நிலையங்கள் பிரதேச செயலகத்தில் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தில் பதிவு செய்தல் கட்டாயமாகும்.
5. தனியார் கல்வி நிலையங்கள் 15 தொடக்கம் 30 நிமிடம் வரை ஆன்மீகம், சமூகம் சம்பந்தப்பட்ட விடயங் களைப் போதிக்கவேண்டும்.

ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுதை அவதானிப்பதற்காக பிரதேச மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் குழு உருவாக்கப்படவுள்ளது. இந்தத் தீர்மானங்களை பின்பற்றாத தனியார் கல்வி நிலையங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-20,26,27)

### விலைமாதுக்கள்...

மாறு சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

பாலியல்தொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் ஏழு விலைமாதுக்கள் அண்மையில் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், அவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த நிலையிலேயே இவர்கள் அனைவரும் பாலியல் தொற்றுநோய்களுக்கு ஆட்பட்டுள்ளனர் என்று சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

பாலியல் தொற்று நோய்களான கொனோறியா மற்றும் ஷர்ப்பீஸ் தொற்றுக்களுக்கு அவர்கள் ஆட்பட்டுள்ளனர். எனவே, அவர்களுடன் தொடர்புகளைப் பேணியோர் உடனடியாக வவுனியா மருத்துவமனையில் எச்.ஐ.வி. தடுப்புப் பிரிவுக்குச் சென்று தம்மை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளுமாறு சுகாதாரப்பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-18)

### தனியார்...

காப்பு தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழு நாடாளுமன்றத்துக்கு நேற்று அறிக்கையிட்டுள்ளது.

இந்த அறிக்கை மற்றும் தகவல் தொடர்பாடல் துறையின் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. அரசாங்கம் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடாது, தனியார் துறையினருக்கு அந்த வாய்ப்பை வழங்குவதே தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (அ-ம)

### நிபந்தனைகளை...

கேட்டுக் கொள்கின்றேன் என்று பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான பேச்சுத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வைக் காணும் செயற்பாட்டில் இறங்கியுள்ளார். இதற்கு அரசின் பிரதான பங்காளிக் கட்சியான பெரமுன முழு ஆதரவை வழங்குகின்றது. ஏனைய கட்சிகளும் ஆதரவு வழங்கும் நிலையில் உள்ளன. இந்த நல்லதொரு சந்தர்ப்பத்தைக் குழப்பியடிக்கவேண்டாம் என்று தமிழ்க் கட்சிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன். சர்வதேச சக்திகளின் நிழ்ச்சி நிரலில் செயற்பட்டால் இங்கு எல்லாம் குழப்பத்தில்தான் முடியும் - என்றார். (அ-ம-22)

### தாம்...

பினரும் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான பேச்சுத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதிக்கும் சம்பந்தன் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு பகிரங்கமாக இடம்பெறவேண்டும். அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் தமிழ், முஸ்லிம், சிங்களக் கட்சிகள் கலந்துகொள்ள வேண்டும். ஒற்றையாட்சியை நீக்கிவிட்டு நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்தும் சமஷ்டி முறையிலான ஆட்சியை வடக்கு - கிழக்கில் நிறுவலாம் என சம்பந்தன் அணியினர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவும் இதற்கு ஆதரவு தருமென்று அவர்கள் எண்ணுகின்றனர். ஆனால், அவர்களின் இந்த நோக்கங்கள் நிறைவேற நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். ஜனாதிபதியும் பெரமுனவின் தீர்மானத்தை மீறி எதையும் செய்யமாட்டார் என்பது எமக்கு நன்கு தெரியும் - என்றார். (அ-ம-22)

### நல்லிணக்கச்...

சட்ட வரைவு, நிறுவன நடவடிக்கைகள், காணிப் பிரச்சினைகள், கைதிகளை விடுதலை செய்தல், அதிகாரப் பரவலாக்கம் ஆகிய 5 பிரதான பகுதிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் இங்கு மீளாய்வு செய்யப்பட்டது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல், தேசிய காணி சபையொன்றை நிறுவுதல் மற்றும் தேசிய காணிக் கொள்கையை உருவாக்குதல், காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை மிகவும் திறம்படச் செயற்படுத்துதல், அதன் டிஜிற்றல் மயமாக்கல் செயற்பாடுகளை நிறைவு செய்தல் மற்றும் இதுவரை தகவல் சேகரிக்க முடியாத காணாமற் போனவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கும் பணிகளை விரைவுபடுத்துதல் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டது.

அத்துடன், இழப்பீடுகளுக்கான அலுவலகம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் என்பவற்றை ஸ்தாபித்தல் மற்றும் அது தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டதோடு எதிர்வரும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் அவற்றைப் பூர்த்திசெய்து, அது தொடர்பான அறிக்கையை வழங்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில், காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைமை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம், அரச துறையினரால் பயன்படுத்தப்படும் தனியார் காணிகளை விடுவித்தல், மகாவலி வலய காணி தொடர்பான பிரச்சினைகளுக்கும் உடனடித் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். கைதிகளின் விடுதலை மற்றும் பொதுமன்னிப்பு தொடர்பில் நீதி அமைச்சின் ஊடாக விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தார். அதிகாரப் பரவலாக்கம், மாகாண மட்டத்தில் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மாகாண ஒம்புட்ஸ்மன் நியமனம் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமால் குணரத்ன, சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் மற்றும் தொடர்புடைய நிறுவன அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (அ-ம)

### வடக்குக்கு...

வடக்குக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்படவுள்ளது என்றும், இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகளை சர்வதேசத்துக்குக் கொண்டுசெல்ல அரசாங்கம் இணங்கியுள்ளது என்றும் அண்மையில் கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்த நிலையிலேயே, இந்தத் தகவல்களை நீதி அமைச்சர் முற்றாக நிராகரித்துள்ளார். (அ-ம)

### வெங்காயம்...

இந்த நிகழ்வில் வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் ஸ்ரீரங்கன் அஞ்சனாதேவி, முன்னாள் விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் மற்றும் விவசாய அதிகாரிகள், விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-ம-20)

வாடகைக்கு
K.K.S. வீதியில் 4 அறைகள் கொண்ட வீடும் ஸ்ரான்லி வீதியில் 2 கடைகள் 20x10, 10x10 வாடகைக்கு உண்டு.
077 199 6117
CS/50762/AH-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# AFTER O/L

CHER
COLLEGE OF HIGHER EDUCATIONS AND RESEARCHES

சாதாரண தரப் பரீட்சையின் பின்னர்!

**Diploma In Information Technology**
**AND**
**Diploma In English**

ஆங்கிலம் மற்றும் IT இல் உறுதியான அடித்தளத்தை நீங்கள் பெறவிரும்பினால் இந்த ஒருங்கிணைந்த பாடநெறித் தொகுப்பு உங்களுக்கானது!

50% DISCOUNT

அனைத்துக் கற்கை நெறிக்கும் 50% கட்டணக்கழிவு வழங்கப்படும்.

Register For June Intake | Admissions Open

Mobile : 077 800 5204
Phone : 021 221 0604

No.131, Manipay Rd, Jaffna.
(யாழ். பஸ் நிலையத்திலிருந்து 500m தொலைவில்)



## TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

A / L தொழில்நுட்ப பிரிவு
புதிய கல்வியாண்டு
A/L 2025

- திகதி - 11.06.2023 (ஞாயிற்றுக்கிழமை)
- நேரம் - காலை - 8.30

(தேசிய, மாவட்ட ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழகதெரிவு)

தொடர்புகளுக்கு: 077 017 5346



## TECHNA
Technical Institute
Smart thinking leads to innovate

புதிய பிரிவு ஆரம்பம்
11.06.2023
(ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.00 மணிக்கு

தொழினுட்பப்பிரிவு
A/L 2025

மாணவர்கள் TECHNAவை ஏன் தெரிவு செய்கின்றீர்கள்!

- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு
- தொடர்ச்சியாக வகுப்புகள் நடைபெறும்.
- மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
- புள்ளிகளுக்கேற்ப Z.SCORE மூலமான தரப்படுத்தல்
- ஒவ்வொரு பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
- அனுபவமிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்
- செயன்முறை பயிற்சி வகுப்புகள்
- களப்பயணங்களை மேற்கொள்ளல்
- இறுதிப்பரீட்சைக்கான விளைதிறனான தயார்படுத்தல்

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் - M.விஷ்ணுதேவன்
பொறியியல் தொழினுட்பவியல் - S.மயூரதன்
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் - S.சக்தி
தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் - T.லவன்
விவசாய விஞ்ஞானம் - S.சஜீபன்
கணிதம் - T.சசிகரன்
புவியியல் - S.Pகரன்

077 170 3549
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.
Techna technical institute



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் குருநகர் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. முழுமையாகவோ அல்லது பிரித்தும் கொடுக்கப்படும். குருநகர், பாசையூர் பிரதான வீதிக்கு அருகில் உண்டு.

077 653 1980,
077 192 2010

(CS/50746)AH-1



## KBK கணக்கீட்டுக் கல்லூரி

| சுவாமியார் வீதி, கொழும்புத்துறை | பலாலி வீதி, கந்தர்மடம் |
|---|---|

A/L 2025 புதிய பிரிவுகள் ஆரம்பம்

கணக்கீடு
திரு. க.பா. பாலகஜன் (Tutorial Staff)

ஆரம்பம் : 12.06.2023 திங்கள் 4 மணி
A/L 2023, A/L 2024 புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

077 452 0043

(CS/50727)AH-1



## மணமகன் தேவை

01. கொக்குவில் - அல்வாய் இந்து கௌரவ குடும்பம் (V), 1993, ரோகினி, Phd, Assistant Lecturer, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33627
02. கைதடி, இந்து, கௌரவகுடும்பம் (V), 1991, பூசம், MSc, Research Assistant, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34245
03. புலோலி - கரவெட்டி, இந்து, கௌரவகுடும்பம் (V), 1994, திருவாதிரை, Book keeper, Unior Accountant, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34097
04. உரும்பிராய், இந்து, கௌரகுலம் (V), 1993, திருவோணம், Masters in Biotechnology, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33574
05. தெல்லிப்பழை - கோண்டாவில், இந்து, கௌரவகுடும்பம் (V), 1993, அச்சுவினி, BSc, கனடா மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33363
06. பருத்தித்துறை - சாவகச்சேரி, இந்து கௌரவகுடும்பம் (V), திருவாதிரை, MSc, கனடா மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 32904
07. தெல்லிப்பழை - உரும்பிராய், இந்து கௌரவகுடும்பம் (V), மிருகசீரிடம், BSc (Hons), MBA, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 31812

(CS/25185)AH-1

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Phone - 077 539 3728
Whatsapp - 077 803 8193


# மரண அறிவித்தல்

## செல்வி இராசேந்திரன் நிசாந்தி

**(மாணவி - யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி - A/L 2024)**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10.04.2005 | 07.06.2023 |



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இராசேந்திரன் நிசாந்தி கடந்த (07.06.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராசேந்திரன் - நிரோயினி தம்பதிகளின் அன்பு மகளும், ஜதுர்ஷா, யதுஷன் ஆகியோரின் அன்புத் தங்கையும், ஹரிஸ், அபினாஸ் ஆகியோரின் அன்புச் சித்தியும், நித்தியானந்தம் பாலஜோதியின் அன்புப் பேர்த்தியும், தமயந்தன் - நித்தியா தம்பதிகளின் பெறாமகளும், தயாபரனின் அன்பு மருமகளும், தியா, றியான் ஆகியோரின் அன்பு அக்காவும், ஜெயக்குமாரின் அன்பு மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் இல.37, உடையார் லேன், கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS/50759)AH-1

அம்மா - 077 356 1169
ஜதுர்ஷா - சகோதரி -077 841 9485
யதுஷன் - சகோதரன் - +1416 454 7149

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.